PUBLIC LIBRARY
25 MAY 2011



# பாதுகாவலன்

22
05
2011

புனித இயூஜின் விண்ணகப் பிறப்பின் 150வது விழா சிறப்பு மலர்

மலர் : 135 | இதழ் : 10 | பக்கம் : 12 | விலை : 25.00

## ஏழைகளில் அன்பும் தூர நோக்கும் கொண்டவர் – இயூஜின் டி மசனட்!

"நற்செய்தி அறிவிப்போரின் பாதங்கள் எத்துணை அழகாய் இருக்கின்றன" (உரோ. *10:18*)




அமலமரித் தியாகிகள் சபையின் நிறுவுனரும், இறைவனின் ஊழியனுமாகிய புனித இயூஜின் டி மசனட்டின் விண்ணக பிறப்பின் 150 ஆவது ஆண்டை நினைவு கூர்ந்து அவரை எமக்கு புனிதராக தந்த எல்லாம் வல்ல இறைவனுக்கு முதலில் நன்றி கூறுவோம்.

அவரது தூர நோக்கும், நற்செய்தி அறிவிப்புக்கான ஆர்வமும், அமல மரித்தியாகிகள் சபையை உருவாக்கி உலகம் பூராகவும் பரந்து பணிபுரியவும் சிறப்பாக எமது மண்ணிலும் அன்று தொடக்கம் இன்றுவரை இப் பணியாளர்கள் நற்செய்தி பணிபுரிவது இவரால் எமக்கு கிடைத்த பாக்கியமே.

ஏழைகள் மேல் அக்கறை கொண்டு எளியோருக்கு நற்செய்தி என்ற வாக்குடன் தொடர்ந்த இவரது சேவை தொடர்ந்தும் எம் மக்களுக்கு தேவை.

எனவே 30 வருட போரின் பின்னர் அதன் கொடிய விளைவாக எம் மண்ணில் மக்கள் மன வேதனையிலும், சொத்துக்களை, உறவுகளை, உரிமைகளை இழந்து ஏதிலிகளாகவும் உள்ள இவ் வேளை, புனித இயூஜின் டி மசனட்டின் பணி ஆர்வம் தொடர்ந்தும் அவரது தியாகிகளில் மிளிர இச்சிறப்பிதழில் ஆசித்து நிற்கின்றேன்.

+ மேதகு இ. தோமஸ் சவுந்தரநாயகம்
யாழ் ஆயர்,
ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.



## பாதுகாவலன் எமது எண்ணம்

# யாழ் மண்ணை நேசித்த புனித. இயூஜின் டி மசனட்டும் அவர் வழிவந்த அமலமரித்தியாகிகளும்

"நற்செய்தியை அறிவிக்கவும், நல்வாழ்வைப் பலப்படுத்தவும், நலம் தரும் செய்தியை உரைக்கவும், விடுதலையைப் பறைசாற்றவும், சீயோனை நோக்கி, "உன் கடவுள் அரசாளுகின்றார்" என்று கூறவும் வருவோனின் பாதங்கள், மலைகள் மேல் எத்துணை அழகாய் இருக்கின்றன! (எசாயா 52:7) என்ற இறைவாக்கினர் எசாயாவின் ஆழ்ந்த, ஆறுதலளிக்கும் வரிகள், வறண்ட எம் இதயங்களை நனைத்துச் செல்கின்றன. மேலும், யாழ் மண்ணிலே முதன்முதலாக இறையரசின் விழுமியங்களை எம் மண்ணிலும் விதைத்த தொடக்ககால அமலமரித்தியாகிகளை இவ்வரிகள் ஞாபகப்படுத்துகின்றன.

"நினைவுகளின் ஆன்மீகம்" என்பது எம் திருமறையின் ஆழமான ஆன்மீகம். இந்த ஆன்மீகம், திவ்விய நற்கருணையில் யேசுவை ஆண்டவராக, உயிருள்ள பிரசன்னத்துடன் ஏற்றுக் கொள்ளவும், அதே ஆண்டவரை எமது ஆன்ம உணவாக உட்கொள்ளவும் நம்மைத் தூண்டி, அழைக்கின்றது. ஆனால் எல்லா நினைவுகளும் ஆன்மீகமாகி விடாது. இறைவன் எந்தளவிற்கு இந்த வரலாற்று நினைவுகளில் மகிமைப்படுத்தப்படுகின்றாரோ, எந்தளவிற்கு இந்த வரலாற்று நினைவுகளின் உந்துதலினால் தூய்மையடைந்து, மீட்பை அனுபவிக்கின்றார்களோ அதனடிப்படையில் தான் நினைவுகள் ஆன்மீகமாகின்றன.

அமலமரித்தியாகிகள் தங்கள் நிறுவுனர், ஆயர் இயூஜின் டி மசனட் ஆண்டகையின் 150வது விண்ணகப் பிறப்பு விழாவை நினைத்து, களிகூர்ந்து கடவுளுக்கு நன்றி செலுத்துகின்றார்கள். யார் இந்த அமலமரித்தியாகிகள்? ஏழை எளியவர்களுக்கு நற்செய்தி நவில்வதை இலட்சியமாகக் கொண்டு, மரியன்னையின் அரவணைப்பில் சுடர்விட்டு எரியும் தியாகிகள். இச்சபை, பிரான்சு தேசத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட மார்சேநகர் ஆயர் இயூஜின் டி மசனட் அவர்களால் 1810ல் உருவாக்கப்பட்டது. 1847ம் ஆண்டிலிருந்து யாழ் மண்ணிலும், உலகிலே கிட்டத்தட்ட 67 நாடுகளிலும் தற்போது, பணியாற்றி வருகின்றது.

யாழ் மண்ணில் அமலமரித்தியாகிகளின் தோற்றம்? புனித இயூஜினின் பெலமும் பெலவீனமும் அன்பும் ஏழைகளும், புனித இயூஜின் உயிர் விடும் பொழுது தம் சகோதரர்களுக்கு சொன்ன இறுதி வார்த்தை; " அன்பு அன்பு அன்பு" மேலும் யாழின் முதலாவது அப்போஸ்தலிக்கப் பணி முதல்வர் ஆயர் ஹொராசினி பெட்டகினி (1845 - 1857) அவர்களின் காலத்திலே இறைபணியாளர்களுக்கு மிகவும் தட்டுப்பாடு நிலவியது. மேலும் புனித இயூஜினின் பெலவீனத்தை தெரிந்திருந்த ஆயர் பெட்டகினி: "எம் மண்ணில் ஏழைகள் நிறைந்து, இறை பணியாளர்கள் குறைந்து வாழ்கின்றார்கள்" என்ற உடனேயே அமலமரித்தியாகிகள் நால்வரை யாழ் மண்ணுக்கு அனுப்பி வைத்தார். இதில் சிறப்பு என்னவென்று சொன்னால் புனித இயூஜின் உயிரோடு இருக்கும் பொழுதே யாழ் மண்ணுக்கு அமலமரித்தியாகிகளை அனுப்பியதுதான். அவர்களும் 35 நாள் கடினமான கடல் பயணத்தின் பின்பு யாழ் மண்ணிலே கார்த்திகை 28, 1847ல் காலடி வைத்தார்கள். அந்த நால்வரில ஒருவர் தான் யாழ் மண்ணின் அமலமரித்தியாகிகளின் முதலாவது ஆயர் (அப்போஸ்தலிக்க பணி முதல்வர்) சமேரியா அ.ம.தி. அன்று தொடங்கி இன்றுவரை அமலமரித்தியாகிகளின் ஆயர்கள், குருக்கள், சகோதரங்கள் யாழ் மண்ணையும் மக்களையும் அன்பு செய்யத் தவறவில்லை.

யாழ் மறைமாவட்ட முதலாவது ஆயர் கி. பொஞ்சின் அ.ம.தி முதல் யாழ் மண்ணில் இறையரசுப் பணியின் முக்கிய அங்கமாகிய கல்விப பணி (யாழ் நூலகம், புனித பத்திரிசியார் கல்லூரி) மறைபரப்புப்பணி, மேய்ப்புப்பணி (நலலூர் சுவாமி ஞானப்பிரகாசர் அ.ம.தி) என்று பணிகள் பரந்து விரிந்து பெரு விருட்சம் தந்தன. மேலும் இவ்விறையாட்சியப்பணி, முதல் சுதேச ஆயர் தியோகுப்பிள்ளை ஆண்டகையினால் முன்னெடுக்கப்பட்டு இன்று ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையினால் புதிய உத்வேகத்துடன் வளர்ந்து செல்வதை நினைந்து அமலமரித்தியாகிகள் கடவுளுக்கு இருகரம் கூப்பி நன்றி செலுத்துகின்றார்கள்.

ஆனால் இன்று அமலமரித்தியாகிளிடம் இந்த இறையரசுப்பணி உற்சாகம், உத்வேகம் குறைந்து விட்டது என பலர் குறைகூறிக்கொள்வது உண்மையா? இறையரசுப் பணியின் ஊற்றும், உத்வேகமும் மனிதர்கள் அல்ல. பரிசுத்த ஆவி. இறையரசுப் பணியை காலத்துக்கு ஏற்றவாறு, தாம் விரும்பியவர்களை தெரிந்து செயலாற்றி வருபவரும் பரிசுத்த ஆவி. இறையரசுப் பணியிலே வெற்றி தோல்விக்கு இடமில்லை. மனித கண்ணோட்டம் மட்டுமே நம்மை அப்படி பார்க்க வைக்கின்றது. இன்னொரு பக்கம் அமலமரித்தியாகிளின் இறையரசுப் பணியின் தூர நோக்கு: "யேசுவை அறியாத வேறு இடங்களுக்கும், மக்களுக்கும் யேசுவை அறிவிப்பது, இன்னொரு பக்கம் இப்படிச் சொல்லி எமக்கு வழங்கப்பட்டிருக்கும் நடைமுறை பொறுப்புக்களிலிருந்து தப்பிவிடவும் விரும்பவில்லை. ஏனென்றால் முன்னாள் திருத்தந்தை இரண்டாவது அருளப்பர் சின்னப்பரின் வார்த்தைகள் அமலமரித்தியாகிளுக்கு மட்டுமல்ல, எல்லா துறவிகளுக்கும், குருக்களுக்கும் ஒளியாகவும், சவாலாகவும் அமைகிறது "நீங்கள் நினைக்கவும், பிறருக்கு எடுத்துச் சொல்லவும் ஒரு பிரமாண்டமான கடந்தகால வரலாறு மட்டுமல்ல, மாறாக, எதிர்காலத்திலே நீங்கள் நிறைவேற்ற வேண்டிய மாபெரு வரலாற்றுப் பொறுப்பு உங்களுக்கு இருக்கின்றது. எனவே எதிர்காலத்தைப் பாருங்கள். தூய ஆவி மாபெரும் செயல்கள் புரிய உங்களை அனுப்பிக் கொண்டிருக்கிறார்". (அர்ப்பண வாழ்வு எண். 110). எப்படி இளைஞன் இயூஜின், இந்த உலகமே எல்லை என்றிருந்து "சிலுவையில் அறையுண்ட யேசுவை" ஆழமாக உற்றுநோக்கி, புனித இயூஜின் அனாசோ அப்படி இன்று, அதே சிலுவையை அணிகின்ற ஒவ்வொரு அமலமரித்தியாகியும், ஒவ்வொரு குருவும், துறவியும் அதே சிலுவையில் அறையுண்ட யேசுவை ஆழமாக உற்று நோக்கி , இழந்த வாழ்வை, இழந்த ஆன்மீகத்தை, இழந்த அருட்கொடையை மீளவும் பெற்று; அதைப் பிறருடன் பகிர்ந்து யாழ் மண்ணில் மட்டுமல்ல, இப்பாரெங்கும் யேசுவின் விண்ணரசுக் கனவு நனவாக உழைத்திட வேண்டும். இதுவே துறவிகள், குருக்கள், இறைமக்களாகிய எம் அனைவரினதும் இன்றைய அவசர அவசிய ஆன்மீகம்.

அருட்பணி. செ. அந்தோனிமுத்து குருஸ் அ.ம.தி.

## அமதிகளின் வடமாநில முதல்வரின் செய்தி

### எமது மண்ணையும் மக்களையும் அதிகமாக நேசித்தவரே புனித இயூஜின் டி மசனட்



உலகெங்கும் நற்செய்தி மறை பரப்பு பணியாற்றும் அமலமரி தியாகிகளின் இதயத்துடிப்பாகவும், உந்துசக்தியாகவும் விளங்குபவர் எமது சபை நிறுவுனர் இயூஜின் டி மசனட். அவர் காலத்தின் தேவையை கண்முன்கொண்டு, இறைதிட்டத்திற்கு முற்றிலும் தன்னை விட்டுக்கொடுத்து, திருச்சபையில் சரித்திரம் படைக்க புதுமலராய், புரட்சித்தீயாய உதித்தவர். பல்வேறு பணிகளைச் செய்வதற்கு ஒவ்வொரு மனிதனுக்கும் இறைவனுடைய அழைப்பு மனிதர்கள் வழியாகவோ, இயற்கையின் வழியாகவோ வரலாம். யார் வழியாக வந்தாலும் அழைப்பவர் இறைவனே என்ற உயரிய நம்பிக்கையோடும், ஆழமான விசுவாசத்தோடும இறைவனுக்கும், திருச்சபைக்கும், மக்களுக்கும், உலகிற்கும் கிறிஸ்துவின் பெயரால் பணியாற்ற, அமலமரித்தியாகிகளை உருவாக்கி பணிக்கனுப்பிய இறைவனின் உத்தம ஊழியராக விளங்கியவரே எமது நிறுவுனர். உலகம் முழுவதும் "எளியோர்க்கு நற்செய்தி நவில" என்ற விருதுவாக்கோடு பணியாற்றும் அமதிகளாகிய எமது பணிவாழ்வுக்குக் காரணமாயிருந்த எங்கள் புனிதரின் விண்ணகப்பிறப்பின் 150 ஆண்டுகள் நிறைவில் மகிழ்ந்திருக்கும் நமது சபை உறுப்பினர்களோடு வடமாகாண அமதிகளாகிய நாம், இவ்வாண்டு முழுவதும் சிறப்பாக அவரை நினைவுகூரவும், அவர்வழியாக இறைவன் இலங்கைத்திருச்சபைக்கு அளித்த சகல நன்மைத்தனங்களுக்கும், அருள் வரங்களுக்கும் நன்றிகூறவும் கடமைப்பட்டுள்ளோம்.

இலங்கைத் திருச்சபையின் வளர்ச்சிக்கு பல வழிகளிலும் வித்திட்டு உதவியவர் புனித இயூஜின் டி மசனட். அவர் எமது மண்ணையும் மக்களையும் மிகவும் அன்பு செய்த ஒரு புனிதராவார். அவரது தயவால் யாழ் மண்ணில் அமலமரித்தியாகிகள் ஆற்றிய பணிஅளப்பரியது. கிறிஸ்தவ விசுவாசத்தை வளர்ப்பதிலும், பங்குத் தளங்களை உருவாககுவதிலும், கிறிஸ்தவ கல்வி நிறுவனங்களை அமைத்து நிர்வகிப்பதிலும், திருமறையைப் பறைசாற்றுவதிலும், கலை பண்பாட்டு உணர்வுகளை ஊட்டுவதிலும், மரியன்னை பக்தியினை வளர்ப்பதிலும, சுதேச குருக்களை உருவாக்குவதிலும், அமதிகள் புரிந்த சாதனைகள் காலத்தால் அழியாதவை என்பது வெள்ளிடைமலை.

எமது நிறுவுனரின் விண்ணகப்பிறப்பின் நூற்றைம்பதாவது ஆண்டு நிறைவு எம்மை புதியதொரு பாதைகளும், சகாப்தத்துக்கும், புதிய குறிக்கோளோடு இசைந்த விசேட பணிக்கும் இட்டுச் செல்லும் என்பது எமது அசையாத நம்பிக்கை. தியாக சிந்தையோடு உலகெங்கும் சென்று கிறிஸ்துவுக்கு சான்று பகரும் அமலமரித்தியாகிகளாக நாம் வலம்வர ஆசிக்கின்றேன். புனித இயூஜினின் வழியில் எமது சபையின் ஆன்மீக செயற்பாடுகள் தொடரவும், அதே ஆன்மீகத்தில் நம்மையும் நமது குழுமங்களையும் கட்டியெழுப்பவும், துன்புறும் சமகால மனிதர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் ஆன்ம பலனை ஒவ்வொரு அமலமரித்தியாகியும் கொண்டிருக்க வேண்டுமென்றும் இறைவனை வேண்டுகிறேன். தூய ஆவியின் வல்லமைக்கு தலைவணங்கி, புனித மரியன்னையின் வழிநடத்துதலும், புனித இயூஜினின் பரிந்துரையும், எம்மை இறைவழியில் நடத்திச்செல்ல ஆசித்து நிற்கிறேன். நமது மாகாணத்தையும், அதன் ஒவ்வொரு உறுப்பினரையும் அமல அன்னையின் பரிந்துரைக்கு அர்ப்பணித்து இறையாசீர் வேண்டிநிற்கின்றேன்.

"திருத்தூதர் பணிமரபில் நாம் கிறிஸ்துவையும் அவரது சிலுவையையும் பறைசாற்றுகின்றோம்." ($C_4$)

**அருட்தந்தை ம. போல் நட்சத்திரம் அ.ம.தி**
**வடமாநில முதல்வர்**
**அமலமரித்தியாகிகள் சபை**

## அமலமரித் தியாகிகள் சபை நிறுவுனர்

## ஆயர் புனித இயூஜின் டி மசனட்

### விண்ணகப் பிறப்பின் 150 வருட நிறைவு

### 21.05.1861 - 21.05.2011

இந்நிகழ்வைச் சிறப்பிக்க 21.05.2011 சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு யாழ் புனித மரியன்னை பேராலயத்தில்

அதி.வண. யஸ்ரின் ஞானப்பிரகாசம் யாழ் மறைமாவட்டக் குருமுதல்வர் அவர்களின் தலைமையில் நன்றிக்கூட்டுத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

அனைவரும் பங்குபற்றி ஆசி பெற அழைக்கின்றோம்.

**"எளியோர்க்கு நற்செய்தி நவில...."**

மாகாணத் தலைவர்,
யாழ் அமதிகள் குழு.

பொதுசன நூலகம்



# மறைமவாட்டக் குரு முதல்வர் அதி. வண. யஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளார் இதயம் திறந்து....



உலகளாவிய அமல மரித் தியாகிகள், தங்கள் நிறுவினர் புனித இயூஜின் டி மசனட்டின் விண்ணகப் பிறப் பின் 150வது ஆண்டினை நன்றியுடன் நினைவு கூறுகின்றார்கள். இவ்வேளை இறைவேண்டுதலுடன் இணைந்த அன் பின் இச்செய்தியை இச்சபையின் அனைத்து அங்கத்தவர்களுக்கும் அளிப்பதில் மகிழ் வடைகின்றேன். இவர்களுடைய நிறுவு னரின் ஆவலை நற்செய்திப் பணியில், உலகினைப் புதுப்பித்தலில் மிகவும் சிறப் பாக இலங்கை நாட்டில் கைக்கொண்ட மைக்காக அவர்களை வாழ்த்தி நிற்கின் றேன். பெற்றக்கீனி ஆண்டகை, தனது பணியில் உதவிட மறைத்தூதர்களைத் தந்துதவுமாறு இயூஜின் டி மசனட் ஆயரை அணுகிய போது, டி மசனட் ஆயர், உடனடியாக இப்புதிய பணிக்கு சம்மதித்து பின்வரும் அருளுரையை முன்னோடியாக அறிவித்தார். "ஒரு நாள், இந்தப் பெரிய தீவானது எமது சபைக்கு கையளிக்கப்படும் அத்துடன் எமது சபை இத்தீவினை முழுமையாக புனிதமாக்கும்." *(புரட்டாதி 1847)*

நிறுவினர் அவர்கள் இலங்கை மட்டில், மிகவும் குறிப்பாக, யாழ்ப் பாணத்தில் பணிபுரிந்த மறைத்தூதர்கள் மட்டில் கொண்ட ஆழமான கரிசனை யை, இவர் மிகுந்த பாசத்துடனும், அக் கறையுடனும் இவர்களுக்கு எழுதிய மடல்களில் தெளிவாகக் காணக்கூடிய தாகவுள்ளது. இவர்களின் பணியினை அக்கறையுடன் விசாரித்து, இவர்களின் உடல் நலம் பற்றி அறியவும், ஆன் மாக்கள் மட்டில் தணியாத தாகத்துடன் பணியாற்றவும் உற்சாகப்படுத்தி, அடிக் கடி எழுதிய கடிதங்கள் வாயிலாகத் தொடர்பு கொண்டிருந்தார். இங்கு பணி யில் ஈடுபட்ட ஒவ்வொரு துறவியின் மட் டில் காட்டிய பாசமிகு தந்தைக்குரிய அன்பை இவரது கடிதங்கள் தெளிவாகப் புலப்படுத்துகின்றன. தேவை ஏற்படும் நேரங்களில் காத்திரமான அறிவுரைகள் வழங்க அவர் பின் நிற்கவில்லை. " நான் ஒரு புறாவின் எளிமையை அதிகபட்சம் விரும்புகின்றேன். ஆனால் இப்பண்பா னது பாம்பின் விவேகத்தை தடுத்தலா காது என்பதை நான் ஒரு போதும் விரும் பியதில்லை" *( இலங்கைக்கு எழுதிய கடிதங்கள் - தை 1848 )*

யாழ் மறைமாவட்டத்தில் 50 ஆண்டுகளின் கடின உழைப்பின் பின் அமதிகள் தங்களை மிகவும் உறுதிப் பாட்டுடன் நிலை நிறுத்தினார்கள். யாழ் மறைமாவட்டம் 1893ல் மற்றைய மாவட் டங்களிலும் பார்க்க முன்னிலை வகுத் ததை வரலாற்றாசிரியர்கள் ஏற்றுக் கொள கின்றார்கள். இக்கால கட்டத்தில இம மறை மாவட்டம் தகுதி வாய்ந்த பயிற்சியாளர் அடங்கிய நன்கு வளர்ச்சியடைந்த குரு மடத்தை கொண்டிருந்தது. இளையோரின இரண்டாம் நிலை கல்வித்துறையில் கல் லூரியை உள்ளடக்கியிருந்தும், குருக் களின் தாபரிப்பிற்குத் தேவையான சொத் துக்களையும், ஆலயங்கள், பாடசாலை கள், கைவிடப்பட்டோர் காப்பகங்களின் அபிவிருத்திக்கான மூலதனங்களையும் தன்னகததே உருவாக்கியிருந்தது. இக் காலகட்டததில இந்து மத, கலாசசார புதுப்பிததலின் விளைவாக, நிறுவினரின் எதிர்பார்ப்பிற்கேற்ப மறைதூதுப்பணி வெற்றியட்டவில்லை. (வண. பேர்ணி யோலா. யே. ச.). யாழ் மண்ணில், இளம் பெண்களின் கல்வியினை பொறுப்பேற்றுக் கொண்ட திருக்குடும்ப சபை அருட்சகோ தரிகள், இம் மண்ணில் தடம் பதிக்க அமலமரியினரே காரணிகளாயிருந்தார் கள். மரதானைப் பகுதியில் கல்லூரி உருவாகக, புனித பத்திரிசியார் கல் லூாயில் பணிபுரிந்த அமலமரியினரை, கொழும்பு உயர் மறை மாவட்டத்திற்கு அழைத்தமை பற்றி சரித்திரம் தெரியத் தருகின்றது. இவ்வாறாக இலங்கையில் இவர்கள் புரிந்த பாரிய பணி வெள்ளிட மலை.

இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி, அமலமரியின் தொண்டர்கள் இன்றும் பல்லாண்டுகள் இறையரசின் விழுமியங் களைப் பரப்பும் பணியில் பயன் பெற வாழ்த்துகின்றேன். இவ்வேளை நீங்கள் உங்கள் உன்னத கொடையாம் நிறு வுனர் புனித இயூஜின் டி மசனட்டுக் காக இறைவனுக்கு நன்றி நவில்கை யில், யாழ் மறைமாவட்ட குருக்களா கிய நாங்கள், இத்தனை பாரிய அள வில் எமது மறைமாவட்டத்தை உங்கள் கடின உழைப்பினாலும், உங்கள் நிறு வினரின் வேண்டுதலினாலும் அபிவிருத்தி செய்தமைக்காக உங்களுடன் இணைந்து வளமாக நன்றி நவில்கின்றோம். உங் கள் முன்னோர்கள் ஆற்றிய அரும் பணி யின் பயன்களை நாம் அறுவடை செய் கின்றோம். புனித இயூஜின் டி மசனட் எளியோர்க்கு நற்செய்தி நவிலும் பணியில் உங்களை ஆசீர்வதிப்பாராக.

# இலங்கையின் வடபகுதியில் – அமதிகள் 150 ஆண்டுகள் பணி

## வரலாற்றுப் பதிவுகள்

அருட்திரு ஞானமுத்து பிலேந்திரன் (மீள்பிரசுரம்)

அமலமரித்தியாகிகள் சபையினர் கடந்த நீண்ட 150 ஆண்டுகள் இலங்கை யின் வடபகுதியில், அர்ப்பண சிந்தனை யுடன் ஆற்றிய பணியின் விளைவாக சில தனித்தவமான கத்தோலிக்கப் பாரம்பரி யத்தைக் கொண்ட பங்குகளும், மறை மாவட்டங்களும் உருவாகியுள்ளன. இப் பகுதிகளில் நிலவும் கத்தோலிக்க பாரம் பரியத்தை "அமதிகளின் பாரம்பரியம்" என்று கூறுவது பொருத்தமானதாகும். கடந்த 150 ஆண்டுகளில் இவர்கள் ஆற் றிய பணியின் சில கூறுகளைத் தொட் டுச் செல்வதற்கே இச் சிறிய கட்டுரை இடம் கொடுக்கிறது.

**வருகை**

1874ல் அப்போஸ்தல பதிலா யர் பெற்றக்கினி அவர்கள், அமதிகள் சபையின் நிறுவுனர் ஆயர் இயூஜின் டீ மசெனட் அவர்களிடம் விடுத்த உருக்க மான வேண்டுகோளின் விளைவாக 1847ம் ஆண்டு கார்த்திகைத் திங்கள் அருட்திரு செமேரியா தலைமையில் நான்கு அ.ம.தி துறவிகள் இலங்கையின் வடபகுதிக்கு, திருமலை - மட்டக்களப்பு ஆகிய மறைமாவட்டங்களுடன் நீர் கொழுமபையும் உள்ளடக்கிய பகுதிக்கு பணியாற்ற வந்தனர். இவர்கள் பிரான்ஸ், இத்தாலி, ஜேர்மனி, ஸ்பெயின், பெல் ஜியம், ஒல்லாந்து, செக்கோலிஸ், போலந்து, இங்கிலாந்து, அயர்லாந்து ஆகிய நாடு களில் இருந்து வருகை தந்தனர். மண் ணின் மைந்தர் பலரும் அ.ம.திகள் உரு வாக்கம் பெற்று 150 ஆண்டுகள் பணி யாற்றியுள்ளார்கள். இவர்கள் பணிகள் நகரங்களிலும், கிராமங்களிலும், காடு களிலிலும், தீவுகளிலும் வாழும் அனைத்து மக்களையும் சென்றடைந்தன.

**ஆன்மீகப்பணி**

ஏழைகளுக்கு நற்செய்தியை அறிவிப்பதே இவர்கள் சபையின் விருது வாக்காக அமைந்தது. பற்பல இடங் களில் புதிய ஆலயங்களை அமைத்து, அடிப்படை வசதிகள் அற்ற இடங்களிலே பங்குத் தளங்களை ஆரம்பித்த பல இடர் கள் மத்தியிலும் நற்செய்தியை பரப்பு கின்ற, கல்வியை புகட்டுகின்ற, மனித நேயத்தைக் காண்கின்ற பணிகளையும் செவ்வனே செய்துள்ளார்கள். இவர்கள் சபைக்கே தனித்துவமான மறைபரப்பு முறைமகாஞானவொடுக்க முறையாகும். மேலும் திருவிழா நவநாள் தியானங் கள், தவக்காலத் தியானங்கள், இல்லத் தரிசிப்புகள் இவர்களுக்குப் பாரம்பரிய ஆன்மீகப் பணிகளாகும். பற்பல பக்திச் சபைகளையும் உருவாக்கி மக்களின் ஆன்மீக வாழ்வை வளப்படுத்தினர்.

**இறை அழைத்தல்**

இவர்களுக்கு முன் இலங்கை யில் பணியாற்றிய துறவற சபைகள் செய்யாத பணியை இவர்கள் செய் தார்கள். அதாவது மண்ணின் மைந்தர் களையும், மகளீர்களையும் ஊக்குவித்து இறை அழைப்பு பற்றி ஆர்வத்தையும், அர்ப்பணிப்பையும் ஊட்டி அழைத்தலை பெருக்கினார்கள். இலங்கையிலேயே முதல் குருமடமாக 1869 ம் ஆண்டு புனித மாட்டீனார் குரு மடம் இவர்களால் நிறு வப்பட்டது. இவர்கள் கடந்த 150 ஆண்டு களில் பல குருக்களையும் ஆயர்களை யும் உருவாக்கியிருக்கின்றார்கள். ஆற் றல் மிக்க நிர்வாகத் திறமை மிக்க மறை மாவட்ட குருக்களை உருவாக்கி, மறை மாவட்ட நிர்வாகத்தை அவர்களி

(தொடர்ச்சி 08ம் பக்கம்)

# புனித இயூஜின் டி மசனெட்


பிரெஞ்சுப் புரட்சியில் பூத்த பூ
மசனட் குடும்பத்தில் பிறந்த பூ
எக்ஸ் நகரில் உதித்த பூ
அமைதியை தந்த அன்பு பூ

தாழ்ச்சியாய் வாழ்ந்தவர்
உதவியாய் ஆனவர்
தோழனாய் தோள் கொடுத்தவர்
ஏழைக்காய் ஏழையானவர்

சர்வதேச அகதியானவர்
சாதி பேதம் துறந்தவர்
தனிமையில் துடித்தவர்
இறை தாகம் கொண்டவர்

நிறுவினார் ஒரு சபையை
புறாவான்சின் மறைபரப்பாளர்
எனும்பெயரில் பிரான்ஸைத் தாண்டி
பூலோகம் எங்கும் விரிந்தது சபை

எளியோர்க்கு நற்செய்தி நவில
இளையோரை சீர்ப்படுத்த
சமாதானத்தை கட்டியெழுப்ப
மாறியது அமதி குழுமமாய்



புரட்சி படைத்த இயூஜின்
புனிதர் குழாமோடு
பூரிக்கும் இவ்வேளை
விண் அதிர ஒலியெழுப்பி
விளம்புவோம் அவர் புகழை நாம்

மு. நிப்தராஜ் குலாஸ்
புனித வளனார் சிறிய குருமடம்.

# நன்றி நவிலல்

புனிதர்களின் வேண்டுதலாலும் குழந்தை யேசுவின் அருளாலும் எனது மகன் கடந்த 3 1/2 வருடங்களாக சிறையில் இருந்து விடுதலை கிடைக்கப்பெற்றார். தொடர்ந்தும் குழந்தை யேசுவின் அருள் கிடைக்க மன்றாடுகிறேன்.

நன்றி
க. கிறிஸ்தோப்பர் - நெடுந்தீவு

# நீ குருத்துவத்தின் புதிய ஒரு அத்தியாயம்



போர்டோவின் திருக்குடும்பச்சபை நிறுவுனர், பீற்றர் பியன்வெனு நோ ஆய் தனது வாழ்வின் இறுதிக்காலம் நெருங்கி வருவதை உணர்ந்து, தான் நிறுவிய சபையை ஆண்கள் துறவறசபை ஒன்றிடம் ஒப்படைக்க விரும்பினார். பெரிதும் முயற்சியெடுத்தார். ஆனால் பயனளிக்கவில்லை. அவருடைய எண்ணங்கள் அமல மரித்தியாகிகளுடன் தொடர்பு கொள்ளும் வரை சித்திபெறவில்லை. இச்சபையின் நிறுவுனரான மார்செயி நகரத்து ஆயர், யூஜின் டி மசனெட் அவர்கள் 1840ம் ஆண்டு திருககுடும்பச்சபையின் நம்பிக்கைக் கன்னியரை (Hope Sisters) வரவழைத்து ஒரு மடத்தை ஆரம்பித்தார். 1857ம் ஆண்டு நோ ஆய் அடிகளார் துர்ஸ் (Touss) நக்ரம் சென்றபோது அந்நகரத்து ஆயர் குயிபேட் அவர்களின் ஆலோசனையை உள்வாங்கி அமலமரித்தியாகிகள் சபையை அணுகினார். நோ ஆய் அடிகளார் பெயரளவில் மாத்திரம் இச்சபையை அறிந்திருந்தார். எனவே ஆயர் டி மசனெட் மோர்டோவுக்குச் சென்று அவரைச் சந்தித்து உரை யாடி திருக்குடும்பச்சபையின் பல்வேறு பணிகளையும் பார்வையிட்டார். இதன் பயனாக 1857ம் ஆண்டு மார்கழியில் இரு நிறுவுனர்கள். ஆலோசனைக் குழுக்கள். போர்டோ நகரப் பேராயர், கருதினால் டொனே (Dornet) ஆகியோரால் இணைப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. பியன் வெனு தந்தைக்கு அளவில்லாத ஆறுதலையும் அமைதியையும் அளித்தது.

நோ ஆய் அடிகளார் தமது குமாரத்திகளுக்கு எழுதிய கடிதத்தில் இவ்வாறு குறிப்பிடுகின்றார். "நீங்கள் சபையில் பிறந்த போது உங்கள் தொட்டிலில் அமலமரி அன்னை உங்களை பாதுகாத்தது போன்று இச்சபைக்குருக்களும் உங்களுக்குச் சகோதரர்களாகவும் பாதுகாப்பாளர்களாகவும் விளங்குவார்கள். நற்கருணையில் இயேசுநாதர் அளித்த அற்புத பிரசன்னத்தின் ஆசீர்வாதங்களுள் இதுவும் ஒன்றாகும். நாம் செய்து கொண்ட உடன்படிக்கைக் கொப்பி ஒன்றை வரப்பிரசாத மாதா ஆலயத்தில் வைத் திருக்கிறேன். இந்த இரு சபையின் ஒன்றிப்புக்காகவும், இரு சபைகளிலும் உள்ளவர்கள் ஒன்றித்து இறைவனின் மகிமையைப் பரப்புவதற்கும் நாற்பது நாட்களுக்கு மன்றாடுவோம்" என்று நிறைவு செய்கிறார்.

இணைப்பு ஒப்பந்தம் (affiliation) கைச்சாத்திடப்பட்ட சில காலத்தின் பின் தமது பணிக்குத் துணைபுரிய, தமது சகோதரன் ஆமன்ட் நோ ஆய் குருவானவருக்கு உதவி செய்ய அ.ம.தி ஒருவரை அனுப்புமாறு ஆயர் டி.மசனட் அவர்களிடம் விண்ணப்பித்தார். 1858ம் ஆண்டு ஆனித்திங்கள் அருள் திரு பெலோன் (Fr. Bellon) அ.ம.தி அவர்கள் போர்டோ நகருக்கு வந்தார். அவர் சபையின் மனப் போக்கு. நிர்வாகம் என்பவற்றை அறிந்து கொண்டார். நிறுவுனரின் நண்பராகவும், உடன் ஊழியராகவும், விவேகமுள்ள நம்பிக்கையாளராகவும் விளங்கிய இவர் இறுதியில் நோ ஆய் அடிகளாரின் தேற்றரவானவராகவும், ஆதரவாளராகவும் விளங்கினார். நாளடைவில் இருசபை நிறுவுனர்கள், குருக்கள், சகோதரர், சகோதரிகள் தத்தம் அருங்கொடைக் கேற்ப, இறை அரசின் மகிமைக்காக அன்பிலும், நட்பிலும், நம்பிக்கையிலும், நற்பணிகளிலும் இணைந்து செயற்பட்டார்கள். தவத்திரு நோ ஆய் அடிகளார் மரணத்தரு வாயில் வேதனைப்பட்டுக் கொண்டிருக்கும் போதும் திருச்சபைக்காக, எனது அன்பான குமாரத்திகளுக்காக, அன்பான அமலமரித்தியாகிகளுக்காக நான் வேதனைப்பட விரும்புகிறேன் என்று கூறினார்.

இவ்விதமான நம்பிக்கையின் இணைப்புத்தான், திருக்குடும்பச் சகோதரிகள் இலங்கையில், அதுவும் யாழ் மண்ணில் தடம் பதிக்க உறுதி அளித்தது. யாழ். ஆயர் சமேரியாவின் வேண்டுகோளுக்கு முன்னதாகவே இரு நிறுவுனர்களும் சம்மதம் அளித்தனர். 1861ம் ஆண்டு யாழ் விக்காறியேற்றில் பணியாற்ற வரவிருந்த அருட்சகோதரிகளின் பெயர்கள் அறிவிக்கப்பட்டன. இவர்கள் பணிப்பொறுப்பை ஏற்பதற்கு முன்பே இரு நிறுவுனர்களும் 1861 மாசி 8ந் திகதி, வைகாசி 21ந் திகதி இவ்வுலக வாழ்வை நீத்தமை ஒரு துன்பமான விடயமாகும்.

ஆயர் சமேரியாவும் சகோதரிக்ளின் வருகையைத் துரிதப்படுத்தினார். 1862ம் ஆண்டு நடைபெற்ற அமதிகள் பொதுச் சங்கத்திற்கு ஆயர் சமேரியாவும் பங்கு பற்றிக் கூட்ட முடிவில் சகோதரிகளையும் அழைத்துச் செல்ல முடிவு செய்தார். அவர்களுக்குத் தாமே தலைமை தாங்கி தியானம் கொடுதது ஆயத்தம் செய்து, நீண்ட கடற் பயணத்தின் பலவிதமான துனபங்கள், நோவுகளைத் தாங்கி ஏற்றுக் கொள்ள நல்ல ஆயனாக உடன் இருந்து அழைத்து வந்து யாழ் மறைமாவட்டத்தில் சேர்த்தார். அன்றிருந்தே சகோதரிகளின் வாழ்விலும் தாழ்விலும், அந்நியநாட்டின் பல்வேறுபட்ட வாழ்வியல் மாற்றங்களை அவர்கள் சுமந்து செல்ல அ.ம.தி ஆயர்கள், குருக்கள், துறவற சகோதரர்கள் தோள் கொடுத்து உதவினர். சகோதரிகளின் பல்வேறுபட்ட பணிகளிலும், அநாதைச் சிறுவர்களின் கல்வி, சுதேசநவநவசந்நியாசிகளை உருவாக்குவதிலும், அநாதை ஐரோப்பிய சிறுவர் இல்லங்கள் அமைத்துப் பராமரிப்பதிலும், கிறிஸ்தவ குடும்பங்களை உருவாக்குவதிலும், பங்குப் பணிகளிலும் வழிநடத்திச் சென்றனர். சிறுவர்கள், சகோதரிகளிள் பயங்கர கொள்ளைநோய்கள், வறுமை, நோவுகள் இயற்கை அழிவுகள், இழப்புக்கள், மரணங்களிலும் அருகில் இருந்து அன்புடன் பராமரித்தார்கள். புதிய இல்லங்களைத் திறப்பதற்கும், இட மாற்றங்களிலும் ஆலோசனை வழங்கி போர்டோவின் தலைமை இல்லத்துக்கும், யாழ் மறை மாவட்டத்திற்கும் செய்திகளைச் சுமந்து செல்லும் தூதுவர்களாகச் செயற்பட்டார்கள். பிறந்த பொன்னாட்டையும், பெற்றோர், சகோதரர், சபைச் சகோதரிகளையும் பிரிந்து "இறைவன் மாத்திரம்" என்று வாழ்ந்த சகோதரிகளுக்கு அ.ம.தி. குடும்பம், ஆன்மீகத் தலைவர்களாகவும், நெறியாளர்களாகவும் விளங்கியதில் வியப்பில்லை.

1863ம் ஆண்டு தை மாதம் 8ந் திகதி ஆயரின் ஆலயத்தில் அ.ம.தி. குருக்கள் திருக்குடும்பத்துக்குள் வரவேற்கும் சடங்கு இடம் பெற்றது. நமது அருமையான சபையின் மதிப்பிற்குரிய அடையாளமான ஆசீர்வதிக்கப்பட்ட நாடாவையும் (CORD) பெற்றுககொண்ட காட்சி அதிர்ச்சியாகக் காணப்பட்டது. குடும்பமாக ஒன்று சேர்ந்து பிரான்சிய மொழியில் பாடி இறைவனுக்கு நன்றி செலுத்தினர். இன்று அனுபவித்த ஆறுதல் பலகாலத் திற்கு ஊக்கம் அளிக்கும் என்று ஒரு குவானவர் கூறினார். இக்கூற்றுக்கேற்ப இரு துறவறசபைக் குடும்பங்களும "ஏழைகளுக்கு நற்செய்தி" "இறைவன் மாத்திரம்" என்றும் த்ரக மந்திரங்களை மனப்போக்காகக் கொண்டு அநேக ஆண்டுகளாக இலங்கையின் அனைத்து மறைமாவட்டங்களிலும் பரந்து செறிந்து பணியாற்றுகின்றனர். ஐரோப்பிய அ.ம.திகள் பலர் இந்நாட்டில் தங்களைத் தியாகம் செய்து கொண்டனர். சிலர் தம் சொந்த இடங்களுக்குத் திரும்பி விட்டனர். ஐரோப்பிய தி.கு.சகோதரிகளின் நிலைப்பாடும் இவ்வாறு நிகழ்ந்தது. எனவே சுதேச சகோதரிகளின் அழைத்தல்களும் அதிகரித்து, சுதந்திரமாக வாழ, தலைமைத்துவத்தை ஏற்று நிர்வகிக்க, தங்களைத் தாங்களே துறவற வாழ்வில் பணிகளில் வழி நடத்திச் செல்லும் பொறுப்பை ஏற்றுக்கொண்டார்கள்.

திருக்குடும்பச் சபையின் பொதுச் சங்கத்தில், சபை முதல்வர் தெரிந்தெடுக்கப்படும் போது அமலமரித்தியாகிகள் சபை முதல்வர் அல்லது அவரது பிரதிநிதி தலைமை தாங்குவார். எனவே அதிகார பூர்வமாக எமது இணைப்பு வலியுறுத்தப்படுகின்றது. புரட்சியில் பூத்த இருமலர்களான இரு நண்பர்கள், புனித யூஜின் டி மசனெட், ஆசாரத்துக்குரிய பீற்றர் பியன் வெறு நோ ஆய் விண்ணகப் பிறப்பிலும் நண்பர்களாகி விட்டனர். இவர்களின் 150ம் வருட விண்ணகப் பிறப்பிலும் நண்பர்களாகி விட்டனர். இவர்களின் 150ம் வருட விண்ணகப் பிறப்பை மகிழ்வுடன் இரு சகோதர சபையும் நினைவு கூர்கின்றார்கள். இறைவனுக்கு நன்றி செலுத்துகின்றோம். அ.ம.தி, குருக்கள், சகோதரர்களும் நோ ஆய் குடும்பத்தின் அங்கத்தவர்கள் இவர்களின் வழிநின்று வாழ எமது இணைப்பை உறுதிப்படுத்த அன்புறவில் வாழ்ந்து இறைபணி ஆற்றுவோமாக.

அருட்சகோதரி யுஸ்ரீனா. தி.ச
மாகாண இல்லம் - யாழ்ப்பாணம்

# புனித யூஜின் டி மசனட் - இலங்கைக் கத்தோலிக்க திருச்சபையின் 3வது ஸ்தாபகர்

அமல மரிதியாகிகள் சபையின் நிறுவுனராகிய புனித யூஜின் டி மசனட் எனும் ஆயரின் 150வது விண்ணகப் பிறப்பு விழா இலங்கைக்கு ஒரு தனித்துவ சிறப்பு விழாவாகின்றது. ஐரோப்பாக் கண்டத்தை விட்டு வெளியேறாது பிரான்சில் உள்ள மார்செயில் நகர ஆயராக விளங்கிய இவர் எவ்வாறு பல்லாயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பாலுள்ள இலங்கையின் கத்தோலிக்க சமயத்தின் 3வது ஸ்தாபகராக முடியும் என்ற கேள்வி நம் உள்ளங்களில் எழலாம். இலங்கையில் கத்தோலிக்க திருச்சபையின் வரலாற்றுப் பின்னணியை ஒட்டுமொத்தமாக நோக்கும் போது இதற்குரிய விடை கிடைக்க வாய்ப்புண்டு.

இலங்கையின் தற்கால கத்தோலிக்க திருச்சபைக்கு ஏறக்குறைய 500 வருடகால வரலாறுண்டு. இந்த நீண்ட வரலாற்றை ஏற்ற இறக்கங்களுடன் கூடிய மூன்று கட்டங்களாகப் பிரிக்க முடியும்.

## முதல் கட்டம்

இலங்கையில் 1505ம் ஆண்டு முதன்முதல் வியாபாரத்திற்காகவும் கத்தோலிக்க மதத்தைப்பரப்பவும் வந்திருந்தாலும் 1543ம் ஆண்டு ஜோவாவோ டோலிஸ்லாடோ கொண்டே தலைமையில் வந்த பிரான்சிஸ்கன் சபைக் குருவினர் வந்த பின்புதான் மேற்றிலங்கையில் உள்ள கோட்டே இராசதானிப் பதாயிலும் படிப்படியாக வட பகுதியுட்பட மற்றப்பகுதிகளிலும் கத்தோலிக்க சமயம் பரப்பப்பட்டது. 1544ம் ஆண்டு மன்னார் பகுதி மக்களின் வேண்டுகோளின் பேரில் தென் இந்தியாவல் பணியாற்றிக் கொண்டிருந்த பனித பிரான்சிஸ் சவேரியார் அனுப்பிய குருவினால் பல நூற்றுக்கணக்கான மன்னார் வாசிகள் திருமுழுக்குப் பெற்று கத்தோலிக்க சமயத்தைத் தழுவினார்கள். இவர்களுள் ஏறக்குறைய 600 பேர் யாழ்ப்பாண மன்னன் சங்கிலியனால் வாளுக்கிரையாக்கபட்டு மறைசாட்சியானார்கள். மறைசாட்சிகளின் இரத்தம் விசுவாசத்தின் வித்து என்ற திரச்சபையின் தந்தையர்களுள் ஒருவராகிய டேர்டுஸ்லியனின் கருத்துக்கமைய மேற்படி நிகழ்வுக்குப் பின்னர் தான் கத்தோலிக்க சமயம் மன்னாரையும், மன்னாரை அண்டிய பகுதிகளில் மட்டுமல்ல யாழ்ப்பாணம் மற்றும் இலங்கையின் மற்ற இடங்களிலும் வேகமாக பரவி வேர்விடத் தொடங்கியது. எனவே வரலாற்றுக் குறிப்புகளின் படி இலங்கையின் சில இடங்களைத் தரிசித்தாலும் இந்த முறைப்படி தங்கி நீண்ட காலம் மறைப்பணியாற்றாதவிடத்திலும் ஏறக்குறைய 600 பேர் மறைசாட்சியான அந்தப் பாரிய நிகழ்வில் அதன் சங்கிலித் தொடர் போல் வந்த பெருந்தொகையான மக்கள் கத்தோலிக்க சமயத்தை தழுவிய நிகழ்விலும் முக்கிய பங்காளியாக விளங்கிய புனித சவேரியாரை இலங்கையின் முதல் கட்ட கத்தோலிக்க சமய வரலாற்றின் நாயகன் எனலாம்.

## இரண்டாவது கட்டம்

இலங்கை கத்தோலிக்க திருச்சபையின் இரண்டாம் கட்ட வளர்ச்சி இவ்வருடம் 300 வருட விண்ணகப் பிறப்பைக் கொண்டாடும் அருளாளர் யோசப்வாஸ் அடிகளாரின் வருகையுடன் ஆரம்பித்தது எனலாம். 17ம் நூற்றாண்டின் நடுப்பக்கத்தில் இலங்கையில் கத்தோலிக்க திருச்சபை அடைந்திருந்த வளர்ச்சி நிலைக்கு கத்தோலிக்க மக்களுள் கணிசமான தொகையினரைக் கொண்டிருந்த யாழ்ப்பாணக் குடா நாடு, மன்னார் பகுதிகளை உள்ளடக்கிய வட பகுதியில் எடுக்கப்பட்ட புள்ளிவிபரம் சான்றுபகர்கின்றது. இங்கு மட்டும் ஏறக்குறைய 1,10,000 கத்தோலிக்கர் வாழ்ந்து வந்துள்ளார்கள். 50 குருக்களும் ஏறக்குறைய அதே எண்ணிக்கையிலான ஆலயங்களையும், பாடசாலைகளையும் உள்ளடக்கிய பங்குகளாக இயங்கி வந்துள்ளன.

கத்தோலிக்க சமயத்திற்கெதிராகக் கடும் போக்கைக் கடைப்பிடித்த கல்வினிஸத்தைப் பின்பற்றிய ஒல்லாந்தர் 1658ல் போர்த்துக்கேயரிடமிருந்து ஆட்சியைக் கைப்பற்றியதும் முதல் வேலையாக கத்தோலிக்க குருக்கள் எல்லோரையும் நாடுகடத்தினர். கத்தோலிக்க சமயம் தடைசெய்யப்பட்டது. கத்தோலிக்கர் கல்வினிஸத்தைப் பின்பற்ற பல்வேறு வகைகளில் வற்புறுத்தப்பட்டனர். கத்தோலிக்க சமயம் தடை செய்யப்பட்டது. 30 வருடங்களாக கத்தோலிக்கர், குருக்களின்றி ஆயனில்லா ஆடுகள் போல அனாதைகளானார்கள். தொடர்ந்து குருக்களில்லாத நிலை தொடர்ந்தால் மதமே அழியும் நிலை ஏற்படும் என்ற நிலை ஏற்பட்ட போது தான் கைகொடுத்துதவ அருளாளர் யோசப்வாஸ அடிகள் கோவாவில் இருந்து யாழ்ப்பாணம் வநது சேர்ந்தார். இவர் ஏறக்குறைய பத்து வருடம் தனியொருவராக முதலில் யாழ்ப்பாணத்திலும், பின்பு புத்தளம், கண்டி போன்ற இடங்களிலும் பல இடர்கள் மத்தியில் மறைப்பணியாற்றினார். அதன் பின் ஏற்கனவே இவர் தூர நோக்குடன் புத்துயிர் கொடுத்த ஒரட்டேரியன் சபைக் குருக்கள் கிரமமாக வரத்தொடங்கினர். இவ்வாறாக இறங்கு முகமாகப் போய்க் கொண்டிருந்த கத்தோலிக்க சமயம் மீண்டும் ஏறுமுகம் கண்டது. இதனால் இலங்கையின் கத்தோலிக்க திருச்சபையின் வரலாற்றின் இரண்டாம் கட்ட வளர்ச்சின் சிற்பியாக அருளாளர் யோசப்வாஸ் அடிகளார் ஒளிர்கின்றார்.

தொடரும்...

# சிறுவர்களில் இயேசுவைத் தேடி

சின்னஞ் சிறு உள்ளங்கள் நாம் காணும் இயேசு அதிலே தான் எம் உருவாக்கமும் புனித இயூஜின் கண்ட பரந்த பணித்தளமும் உண்டு என உணர்ந்து, உள்ளாந்த சித்தம் கொண்டு சிறுவர்களை இயேசுவாக்கி, அயல் சிறுவரில் மறுசிறுவர்க்கு இயேசுவைக் காட்டி, கடமையில் கண்ணியமாக என் தாய் இல்லம் தந்த பணிப்பில், வளன்புரம் என்னும் கடலருகமைந்த அழகிய கிராமத்தில், ஏழ்மையில் வாழும் நல் உள்ளம். கொண்ட மனிதர்களில், புனிதத்தன்மையும் மனிதத்தன்மையும் கண்டு, கண்டுணர்த்த இருவேளை ஒருவாரத்தில், எம்மை நாம் பணியில் ஈடுபடுத்தி வருகின்றோம்.

பணிக்குப் பரமன் துணை வழங்க புனித இயூஜின் பரிந்துரைக்க, அவர் பெயர் கொண்ட சிறுவர் குழு அமைத்து, எதிர்கால சமூகம், சுமூகமாக இருக்க நல்விழுமியங்களை ஊட்டி, விழுமிய வித்தர்களை இயேசுவின் சித்தம் போல் குழந்தைகளில் உருவாக்கி வருவதோடு, கலை கலைத்துவப் பண்புகளையும் இதற்கொப்பான இதர மறு பண்புகளைக் காட்டி, கலை வளர்த்து வருவதை நினைக்கையில், விண்ணக வாழ்வில் ஆண்டவர் பாதம் அருகமர் ந்து, எமக்காய் தினம் பரிந்து பேசும் புனித இயூஜின் மகிழ்வார் என்பதை நினைக்கையில், உள்ளம் “ஆண்டவரை ஏற்றிப் போற்றுகின்றது” என்ற மரியின் வாழ்த்து, இன்றும் எம்மில் நிதர்சனமாகிறன்து. ஆம், புனித இயூஜின் கண்ட பணிகளை நிறைவேற்றுவதும், நிறைவேற்றப்பட்ட எம் முன்னோர் காட்டிய பணிகளை புணருதாரணம் செய்வதுமே எம் பணியாக நாம் கருதி, சிறுவர்களை ஒற்றுமையில் ஒன்றாக்கி, அவர்கள் வாழ்வை வழமாக்கி, ஆன்மீகத்திலும் ஆண்டவரின் ஆலயத்திலும ஆர்வம் காட்டி, சிறு சிறு இயூஜின்களை இயேசு வைத் தேடி வரவழைத்து, தேவையான ஆன்மீக காரியங்களை கருத்தோடு கண்டுணர வைத்து, மறையறிவு புகட்டுவதே இயூஜின் புதல்வர் எம் பணியாய் உள்ளது.

அருட்.சகோ. யே. நிறோஜன் லெம்பட் அ.ம.தி
இயூஜின் டி மசனெட் குருமடம்

# பாரினில் உதித்த புதுமலர் ஒன்று...

பாரினில் உதித்த புதுமலர் ஒன்று புனிதனாகியதே – ( ii )
எரிந்து சுடர் விடும் அமதிகள் சபைக்கு
ஒளிதரும் மசனெட்டே

I

சிலுவை முன்னே உள்ளம் உருகி அர்ப்பணமானவரே – ( ii )
குருவான என் தலைவன் தாகம் கொண்டார்
ஏழையின் ஏக்கம் போக்கிடவே – ( ii )

II

நலிந்தோர்க்கு நற்செய்தி நவில நம்மை அனுப்பினாரே– ( ii )
ஏழ்மை பணிவு கற்பினை இயேசுவுக்கே
அர்ப்பணமாக்குகின்றோம் – ( ii )

III

அன்னையின் அன்பில் தனித்துவம் படைத்தார் அமதிகள் சபைதனிலே – (ii)
சோர்ந்திட்ட மக்களின் மத்தியிலே எம் சிலுவையே சான்றாகும்
அமதி சிலுவையே சான்றாகும்

*அருட். திரு அ.கறோவ். அ.ம.தி*
*இயூஜின் டி மசனெட் குருமடம்*

# ஏழ்மையின் வடிவம்

ப. நிசாந்தன்
புனித வளனார் சிறிய குருமடம்

பிரான்ஸ் நாட்டு முத்தாய்
பிரபு குல சொத்தாய்
சூரியன் போன்ற ஒளிக்கதிராய்
உதித்தார் எம் இயூஜின்

இறைவனை மறந்தவராய்
தன் வழி வந்தவராய்
சிலுவையை உற்று நோக்கியவராய்
மாறினார் இறைவாக்கினராய்

பல கஷ்டங்களைப் பட்டு
மறைதனை போதிக்க
ஏழைகள் வாழ்வு பெற்றிட
தம் வாழ்வினை அர்ப்பணித்தார்

ஏழ்மை, பணிவு, கற்புதனை
விருதுவாக்காய் எடுத்தார்
எரியும் திரிகளாய் மாறிடவே
ஏனையோரையும் அழைத்தார்.

# இயூஜின் கழகமும் சிறுவர்களும்




பள்ளிப் பருவமதில் துள்ளித்திரியும்
இளங்கன்றுகளே எம் சிறார்களே
கற்றிடுவீர் இறை அன்பை
பெற்றிடுவீர் இறை ஞானத்தை

சிறார்கள் எம் சிறுவயதினிலேயே
சிந்தனை முத்துக்களை வளர்த்திட
இணைந்திடுவீர் இயூஜின் கழகமதில்
உருவாக்கிடுவீர் இனிய சமுதாயமதை

ஆர்வத்துடன் நாம் இணைந்து
ஆனந்தமாய் பழகிடவே
மறை அறிவு மட்டுமன்றி
மனித நேயமும் வளர்ந்ததுவே

ஒற்றுமை என்ற கருவிதனை
ஆயுதமாய் நாம் எடுத்து
இயூஜின் சிறுவர்களாய்
சிறப்புடன் வாழ்ந்திடுவோம்

எதிர்பார்ப்புக்கள் நிறைவேறிட
எதிர்காலம் சிறந்திட
இன்றே இணைந்திடுவோம்
இயூஜின் கழகமதில்

அ. அருண்ஜெனசன்
961/8, வளன்புரம்
கொழும்புத்துறை.



# எங்கள் தந்தையைப் போற்றுவோம்...

எங்கள் தந்தையைப் போற்றுவோம்
பாதம் பணிந்து வணங்குவோம்
எங்கள் இயூஜினை வாழ்த்துவோம் – அவர்
வழியில் நாமும் வாழ்ந்திடுவோம்
அமதி தந்த அன்பரை
அமைதி உள்ளம் கொண்டவரை
அன்பு வழியில் வாழ்ந்தவரை
அன்பராக ஆனவரை

I

எளியோர்க்கு நற்செய்தி உரைத்திட அழைத்தாரே
ஏழ்மை வாழ்வினை வாழ்ந்திட மொழிந்தாரே (ii)
அவர் பணியை நாம் தொடர்ந்திடுவோம்
அவர் போல நாம் மாறிடுவோம் – ( ii )

II

சிலுவை வழியதை சிரமேற் கொண்டாரே
சீடனாய் இவ்வுலகில் நன்றே வாழ்ந்தாரே – ( ii )
தியாகமதை நாம் வளர்த்து அவர்
தியாகிகளாய் நாம் மாறிடுவோம் – ( ii )

அருட். திரு. அ.கறோவ். அ.ம.தி
இயூஜின் டி மசனெட் குருமடம்.

# மக்களோடு மக்களானார்

சமூக கிராம சூழல்களுக்குத் தம்மை மாற்றி யமைக்கக்கூடிய ஒரு பெருந் திறமை இயூஜினிடம் இருந்தது. மக்களின் எதிர்ரொலிகளுக்குச் செவிமடுத்து அவற்றிற்கேற்ப தமது முறைகளை மாற்றிக் கொண்டார். ஒரு பணியென்றால் அங்கே பொது மக்களும் பணியாளர்களும் சேர வேண்டும். ஆகவே அவருடைய “முறை” என்று ஒன்றைப் பிரித்தெடுத்துக் கூறுவது கடினம்.

தடைகளைத் தகர்த்து, சுவர்களை நீக்கி, அனுக்காட் தொடர்பை ஏற்படுத்துவது அவரது சிறந்த பணி. பிரெஞ்சுப் புரட்சியின் பின்னர் மக்களுக்கும் குருக்களுக்குமிடையே ஒரு இடைவெளி தோன்றியது. குரவர்கள் தமது கோயிற் பணி முடித்து குருமனையில் ஒதுங்கினார்கள். இந்தச் சூழலில் இயூஜின் வீட்டுக்கு வீடு சென்று மக்களைச் சந்தித்தார். இயூஜினும் அவரோடு சேர்ந்த குருக்களும், பங்குகளில் ஞானொடுக்கம் நடத்தும் பொழுது, அவர்கள் தட்டாத கதவுகளில்லை. விரும்பியோ விரும்பாமலோ மக்கள் இவர்களுடன் உரையாடி பின்னர் தமது கவலைகளையெல்லாம் இவர்களிடம் சொல்லி ஆறுதல் அடைந்தார்கள். இத்தால் பங்கொன்றின் நிலையைச் சிறிது நேரத்தில் எடுத்துரைக்கக் கூடிய அறிவையும் அனுபவத்தையும் பெற்றார்கள்.

தாங்கள் எந்த மக்களுக்கு மறைப்பணி புரிகின்றார்களோ, அம்மக்களுடன் தங்களை இணைப்பது இயூஜினுக்கு அவசியமாகத் தோன்றியது.

ஸ். பிரிலா - வளன்புரம்,
கொழும்புத்துறை.

# இயூஜின் பணிகள்

பல பெரும் பதவிகளோடு பணிகள் காத்திருக்க, தனக்கு தாழ்மையும் எழிமையுமான பணி வேண்டுமெனக் கேட்டுப் பெற்றுக் கொண்டார். இவ்வாறாக சொந்த ஊரில் பெரும் பணி செய்தார். அவரது தபக் காலப் பேருரைகள், பணக்கார வர்க்கத்தை சீண்டிவிட்டன. ஏழை மக்களின் ஏக்கத்தை போக்கிவிட்டன.

யூட் அனிசியஸ் மதுசன்



# உதித்த இயூஜின்

பிரென்சுப் புரட்சியில் புதிதாகி
புனித வாழ்க்கையில் பூவாகி
தேன் இனிந்த வாழ்க்கையில் ஒளியாகி
தேர்ந்தது ஓர் துறவறத்தை

தொடங்கிய பயணம் தொடர்ந்ததாக
துழத்த துழதுழப்பு விடாமல்
நீர்ப்பந்தத்தின் நீர்த்தியாக நிறுவினர்
அமலமரி தியாகிகள் சபைதனை

ஏழை, எளியவர் வாழ்வின்
ஏழ்மை நிலையை போக்கி
சிலுவையை சிரமாக அணிந்தார்
சிதறிய மனங்களை சிற்பமாக்கினார்

ஏழ்மை, கற்பு, பணிவையே விதைத்து
ஆணவம் என்பதை அடியோடு ஒழித்து
எளியோர் மத்தியில் பணிபுரிய
அமதி குழுமமாய் மாற்றினார்.

ப. அன்ரன் றெஜினோல்ட், வளனார் சிறிய குருமடம

# எமது நிறுவுனரின் பார்வையில் மரியாளும் எமது சபையின் பெயரும்

அருட்சகோ.தே.யேசுபாலன் அ.ம.தி

திருச்சபையில் காணப்படும் பல்வேறுபட்ட மறைபரப்புத் துறவற சபைகளின் பெயர்களில் இருந்து அவற்றின் ஆன்மீகத்தன்மையையும் நோக்கங்களையும் அறியக்கூடியதாகவுள்ளது. இங்கு இரண்டு முக்கிய அம்சங்களைப் பார்க்கின்றோம்.

1. எமது மறைபரப்புச் சபையின் பெயரைத் தெரிவு செய்வது தொடர்பாக எழுந்த பிரச்சினைகள்.

2. எமது சபையில் காணப்படும் மரியாளின் ஆன்மீகம்

**அமலமரித் தியாகிகளின் மறைபரப்புச் சபையின் பெயர்**

ஆரம்ப காலங்களில் எமது சபையின் பெயர் "புறவான்ஸ் நகரத்து மறைத்தூதுப் பணியாளர்கள்" என வழங்கப்பட்டிருந்தது, ஆயினும் இந்தப் பெயர், பொருத்தமானதொன்றாக அமையவில்லை. காரணம் இம் மறைபரபபுச் சபையானது தனது பணிகளையும் கடமைகளையும் புறவான்ஸ் நகருக்கு அபபாலும் ஆற்ற முற்பட்டது. எனவே பின்பு புனித சாள்ஸ்சபைத்தியாகிகள் எனப் பெயர் மாற்றப்பட்டது. இந்தப் பெயரினைச் சூட்டுவது தொடர்பாக சபையின் ஸ்தாபகர் ஆச்சரியம் அடைந்தார். அவர் தனது கருத்தை இவ்வாறு வெளிப்படுத்தினார்.

"இப்பெயர் தொர்பாக எனக்கு எதுவித தனிப்பட்ட சந்தோஷமும் இலலை. மேலும் அப்பெயர் பற்றிச் சொல்வதாயின் அந்தப் பெயர் தொடர்பாக எனக்கு விருப்பம் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். புனித சாள்ஸ் எனது தனிப்பட்ட பாதுகாவலர்." தந்தை இயூஜின் டி மசனட் இந்தப் பெயர் மாற்றியமைக்கப்பட வேண்டும் என்ற முடிவுககு வந்தார். அன்றிலிருந்து அபபெயரை மாற்றுவதற்கும் புதிய பெயரை சூட்டுவதற்குமான முக்கிய தகவல்களை சேகரித்தார். புதிய பெயரை நடைமுறைக்குக் கொண்டு வருமுகமாக பல தடைகளையும் தடுமாற்றங்களையும் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. மாதாவின் மாசில்லாத உற்பவத்திருநாளுக்கான நவநாட்கள், பன்னிரண்டு அப்போஸ்தலர்களின் ஆலயத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்த காலப்பகுதியில் அருட்தந்தை டி மசனட் தனது வேண்டுகோள்களைப் திருத்தந்தைக்கு அனுப்பி வைத்தார். அருட்தந்தை, டி மசனட், மரியாளை ஒரு தியாகியாக, அதாவது இயேசுவின வாழ்வில் முழுமனத்துடன பங்காற்றிய ஒரு தாயாகப் பார்த்தார். இவை அனைத்தும் உள்ளடங்கிய ஒரு துறவற சபையாக அமலமரித்தியாகிகள் சபையைப் பார்த்தார். 1825ம் ஆண்டு மார்கழி திங்கள் 22ம் நாள் டி மசனட், அருட்தந்தை தம்பி யேருக்கு எழுதிய கடிதத்தில் இவ்வாறு குறிப்பிடுகின்றார். "அவர் மாதாவை அன்பு செய்து வந்த போதிலும் மரியாளின் முக்கிய பங்களிப்பான இயேசுவின் மீட்புத்திட்டத்தில் அவரது பங்களிப்பை விளஙகிக் கொள்ள முடியவில்லை. அதை விளங்கிக கொள்ள ஏற்பட்ட தாமதம் தொடர்பாக கவலை அடைவதாகக் கூறியிருந்தார்."

அருட்தந்தை டி மசனட் அவர்கள் சபைக்குப் பாதுகாவலர் ஒருவரைத் தேடிக்கொண்டிருந்தார். அந்தப் பாதுகாவலர் எமது சபையின் இலட்சியத்தை வெளிக்கொண்டு வருபவராக இருக்கவேண்டும். ஆனால் மரியன்னையை தனது சபையின் பாதுகாவலியாக கொள்வது தொடர்பாக எண்ணியிருக்கவில்லை. அருட்தந்தை உரோமாபுரியில் இருக்கும்போதுதான் மரியாள் யார் என்ற உண்மையை உணர்ந்து கொண்டார். அதன்பின்புதான் சபையின் அங்கத்தவர்கள் தங்களை அமலமரித்தியாகிகள் என இனங் காட்டிக் கொண்டார்கள். எவ்வாறு மரியாள் மீட்புத் திட்டத்தில் பங்கு பற்றினாளோ அவ்வாறே இவர்களும் தங்களைத் தாங்களே முழுமையாக கடவுளின் திட்டத்திற்கு கையளித்திருந்தார்கள்.

**எமது சபையின் பெயரில் அடங்கியுள்ள ஆன்மீகம்**

அருட்தந்தை டி மசனட் எமது சபையின் பெயரைத் தெரிவு செய்வதற்கு அவர் மரியன்னை மீது கொண்டிருந்த தனிப்பட்ட பக்தியோ, அல்லது அவர் மரியன்னை மீது கொணட தீராத ஆசையினாலும் ஆவலினாலும் ஈர்க்கப்பட்டது மட்டுமல்ல காரணம், அத்தோடு அமலமரித்தியாகிகளின் வாழ்வானது மரியன்னையின் வாழ்வில் பிரதிபலிககப்பட்டது என்பதுதான். இவ்வுண்மையினை இரண்டு விடயங்களினூடாக வெளிப்படுத்துகின்றார்.

1. நாம் எம்மை மரியன்னைக்கு அர்ப்பணித்திருப்பது எமக்கு பெருமை சேர்ப்பது மட்டுமல்ல, ஆறுதலையும் அளிக்கின்றது.

2. மரியன்னையின் பாதுகாவலின் கீழ் நாம் கடவுளுக்கு அர்ப்பணம் செய்யப்படுகின்றோம்.

மரியாளுக்கென்று விசேட விதமாக அர்ப்பணம் செய்யப்பட்டுள்ள மரியன்னையின் சாதாரண சேவகர்களாகிய அமலமரித்தியாகிகள், மரியாளுக்குக் கொடுக்கப்படும் வணக்கங்களும் வெளிப்படையான மரியாதையும் மட்டும் போதாது, அதிலும் விட மேலதிகமாக எதிர்பார்க்கப்படுகின்றார்கள். மரியாள், அமலமரித்தியாகிகளின் சபைக்கு ஆரம்ப காலத்தில் இருந்தே அவளது அருளாதரவினை வழஙகி வந்த போதிலும், அவர்கள் அவளை முழுமையாக கண்டு பாவிக்கவில்லை. ஈற்றிலே அவர்கள் மரியன்னையின் கரிசனையை

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

# கவிதைச் சரம்

## அமதிகளின் தலைமகனே வாழ்க வாழ்க!

புறவான்சின் புதுமலராய் பிரான்சு நாட்டில்
புரட்சியொன்று நடந்தபோது உதித்த எங்கள்
புனிதனே தலைமகனே அமலமரி தியாகிகளின்
புண்ணியத்தின் புரட்சி வீரா வாழ்க வாழ்க

சிறுவயதில் நாடிழந்தும் சொந்த வீடிழந்தும்
சின்னப்பிரபு என்ற அந்தஸ்தை தானிழந்தும்
சிறிதளவும் மனம் குன்றா கற்றுயர்ந்து
சிந்தையில் இறைமகனை சுமந்தவனே வாழ்க வாழ்க

செல்வமும் புகழும் பெற்றோரை சேர்ந்திருக்க
செல்லத் தங்கையோ அன்போடு அருகிருக்க
செவ்வனே அத்தனையும் உல்லாசம் தந்தபோதும்
செயல்புரிய ஏழைகளை நாடியோனே வாழ்க வாழ்க

இளமையின் இனியவொலி உள்ளத்தில் ஊசலாட
இனிமையான கடந்தகாலம் மின்னலாக துலங்கிட
இயேசுபிரான் திருச்சிலுவை காட்டிய பாதையிலே
இறைபணிக்கு அழைக்கப்பெற்ற நற்குருவே வாழ்க வாழ்க

திருத்துவத்தின் அழைப்பினுள்ளோர் அழைப்பைக் கண்டு
திருமறையில் அமதிகளின் சபையைக் கொண்டு
திசையெங்கும் கடலோடி ஏழை எளியவர்க்கு
திருச்சுதனை அறிக்கையிட்ட நற்பிதாவே வாழ்க வாழ்க

ஆயனில்லா ஆடுகள்போல் ஈழ மக்கள்
ஆண்டாண்டாய் அவதியுறும் சேதி கேட்டு
ஆண்டவர் இயேசுபாதம் நாம் தொடர
ஆவலுடன் அமதிகளைத் தந்தவனே வாழ்க வாழ்க

அவனியிலே அன்புமலர் மணம் பரப்ப
அன்பு வார்த்தைகளை இறுதியாக விதைத்துவிட்டீர்
அன்பின்றித் தவிப்போர்க்கு என்றென்றும் அன்புருவாய்
அமதிகளின் வடிவில் வருபவரே வாழ்க வாழ்க

அமதிகளின் தலைமகனே இயூஜினாரே!
அமைதியின்றி அலைகின்றோம் மைந்தர்கள் நாம்
அவனியிலே சாந்தியுடன் அன்பும் பெருக
அன்பரசன் இயேசுவிடம் மன்றாட வேண்டுகின்றோம்

அருட்சகோ. றமேஷ் அ.ம.தி

## இறையாசீர் வேண்டுகின்றோம்...

ஈழத்து மண்ணிலே இறைமகனின் திருமறையை
ஈடில்லாப் பெருமையுடன் வளர்த்தெடுத்த அமதிகளே
கடல் காற்றும் விண்மீனும் கதிரோனும் இருக்கும் வரை
களங்கமற்ற உம் சேவை எம் மனதில் இளையோடும்.

"மசனெட்டின்" உள்ளமதில் பெருக்கெடுத்த இறைஞானம்
எம் நாட்டின் திருச்சபையில் நிறைவாக பொழிந்ததனால்
விருப்புடனே குருமணிகள் எம் மண்ணில் கால் வைத்தார்
நம்பிக்கை விசுவாசம் உயிர் பெற்று எழுந்ததுவே

புரியாத மொழியதனை வாஞ்சையுடன் கற்றறிந்து
தெரியாத பூமிதனில் கால் நடையாய் பயணித்து
வாழ்வாலும் வார்த்தையாலும் நற்செய்தி அறிவித்து
எம் மக்கள் உள்ளமதில் அருள் மழையை பொழிவித்தீர்

கல்விக்கு முதன்மை இடம் கொடுத்துப் பணி செய்து
கலைக்கூடம் பல நிறுவி அறிவொளி ஏற்றி நின்று
உத்தமராய் உயர்ந்து நாம் நல் வாழ்வு வாழ்வதற்கு
உடல் பொருள் ஆவி தந்து இதயமதில் நிறைத்துள்ளீர்.

கன்னி மரி வழிநின்று இறையேசு தடம்பதித்து
யாழ் மறைக்கு உயிர் கொடுத்து இமயமாய் உயரவைத்த
உம்பணிகள் உயர்வு பெற அழைத்தல்கள் பெருகி வர
இறையாசீர் வேண்டுகின்றோம் உளமார வாழ்த்துகின்றோம்.

இ. அ. அமலரட்ணம்

# இலங்கைத் திருச்சபையின் வளர்ச்சிக்கு பெரும்பங்காற்றியவர் புனித இயூஜின் டி மசனட்

அருட் சகோ.றமேஸ் அ.ம.தி

பலருக்குப் பலவிதமாக இறையனுபவத்தை காண்பிக்கும் ஆவியானவர், பிரான்சு நாட்டு புறவான்ஸ் நகரின் சின்னப்பிரபு, புனித இயூஜின் டி மசனட் மேலும் நிழலிட்டார். மனிதம் வாழ வேண்டும், அதுவும் முழுமையாக வாழ வேண்டும், குறைவில்லாமல் வாழவேண்டும், மதிப்போடு வாழ வேண்டும், மாண்போடு வாழ வேண்டும். இதன் மூலம் இவ்வுலகிலே புனிதம் பிரதிபலிக்க வேண்டும் என்ற தன்னுடைய உயரிய எண்ணத்தை நிறைவேற்ற இறைவன் புனித இயூஜின் டி மசனட்டாரை தன் பணிக்கென அழைத்துக் கொண்டார். இவர்தான் உலகெங்கும் பணியாற்றும் அமலமரி தியாகிகளின் இதயத்துடிப்பு. அமலமரித் தியாகிகள் சபையின் நிறுவுனர்.

உயர் குலத்திலே, பணக்கார வர்க்கத்திலே, பிரபுக்கள் நிலையிலே பிறந்து வளர்ந்தாலும், புனித இயூஜின் சிறுவயது முதல் தன்னில் ஒலித்துக் கொண்டிருந்த இறைவனின் அழைப்பின் ஓசைக்கு செவி கொடுத்து வாழ்ந்தார் என்பதே பேருண்மை. இறைவனில் ஆழ்ந்த விசுவாசம், செபம், மரியன்னையில் நம்பிக்கை, நேர்மையான நேரடிப் பேச்சு, கூர்மையான அறிவு, ஈகையுள்ளம், ஏழைகள் மட்டிலான அன்பு போன்ற நல்ல பண்புகள் அவரின் இதயத் துடிப்பிலும், மூச்சிலும், பேச்சிலும் கலந்து வளர்ந்தன. பிரான்சியப் புரட்சியினால் சிறுபராயத்திலே இடத்துக்கு இடம் அலைந்து அகதி வாழ்வையும், துன்பங்களையும் அனுபவித்து வாழ்ந்த சிறுவன் இயூஜினின் சிறிய உள்ளத்தில், தன் மக்களை காப்பாற்ற வேண்டும் என்ற புரட்சியான எண்ணங்களே துளிர் விட்டன. ஆனாலும் இறைவனின் திட்டம் அவர் மட்டில் வேறுபட்டிருந்தது. தனது இளமையின் துடிப்புக்கு அடிமையாகிக் கொண்டிருந்த இயூஜின் டி மசனட்டாரின் உள்ளத்தில் ஆவியானவர் ஊடுருவினார். கடந்த கால வாழ்வு அவர் நினைவுக்கு வர, அவர் உள்ளத்தில் உணர்வுகள் ஊறத்தொடங்கின. சிறைக்கூடம் நாடினார், சேரிகளைத் தேடிப்போனார், வைத்தியக் கூடம் சென்றார். 1807 இல் பெரிய வெள்ளியன்று சிலுவையில் அறையுண்ட இயேசுவை உற்று நோக்கினார், தன் நிகழ்கால வாழ்வை நினைத்தார், தெளிவு பெறறார், உள்ளம் உருகினார், இயேசுவிடம் சரணடைந்து தன்னை அவருக்கே கையளித்தார். குருவாக திரு நிலைப் படுத்தப்பட்டு இறைபணியைத் தொடர்ந்தார்.

சிறுவயதில் அவர் அனுபவித்த துன்ப வழுக்கள், அகதி வாழ்க்கை, அவரை இயேசுவின் சிலுவையின் கண்ணோட்டத்தில் சிந்திக்கத் தூண்டியது. அக்காலத்தில் மக்களின் துன்பநிலையை கண்டு அவர்களுக்கு வாழ்வு கொடுக்க, இயேசுவின் நற்செய்தியின் ஒளியில் மக்களை ஒன்றிணைக்கப் புறப்பட்டார். கடவுளுடைய மகிமைக்காகவும், திருச்சபையின் நன்மைக்காகவும், ஏழை மக்களின் நல் வாழ்விற்காகவும் தன்னை அர்ப்பணித்த புனித இயூஜின் டி மசனட், தன்னுடன் பயணிக்கக் கூடிய சில குருக்களையும் இணைத்து அமலமரித் தியாகள் சபையை நிறுவினார். இறைவனின் அழைப்பில் அவர் கொண்ட ஆழமான நம்பிக்கையாலும், மரியன்னை மட்டில் அவருக்கிருந்த பற்றுதலாலும் அமலமரித்தியாகிகள் சபை திருச்சபையால் இனங்காணப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது. மிகவும் குறைந்த உறுப்பினர்களைக் கொண்டு தங்கள் பணியை ஆரம்பிக்கத் தொடங்கினாலும், உலகனைத்திற்கும் இயேசுவின் நற்செய்தியை எடுத்துச் செல்ல வேண்டும் என்பதே இவரது விருதுவாக்கு. இதனால்தான் அன்று இலங்கைத் திருச்சபைக்குப் பொறுப்பாக இருந்த ஆயர் பெறறக்கினி அவர்கள் தன்னுடன் இலங்கையில் பணியாற்ற குருக்களின் உதவியை நாடிய பொழுது, ஆயர்கள் மாநாட்டில் கலந்து கொண்ட ஆயர் ஒருவர் "புனித பவுலுடைய இதயத்தை போன்ற இதயமுடையவர்" என்று புனித இயூஜினை அடையாளம் காட்டினார்.

தனது பணிக்காலத்தில் இலங்கை முழுவதனையும் பலதடவைகள் கால் நடையாக வலம் வந்து கத்தோலிக்க விசுவாசிகளை ஊக்கப்படுத்தி, இறையன்பில் ஆழப்படுத்திய வாஸ் அடிகளாரின் அற்புதப் பணி இன்று வாழும் எம் எல்லோரையும் மிகவும் சிந்திக்க வைக்கிறது. ஒல்லாந்த ஆணவத்தால் அழிந்து கொண்டிருந்த இலங்கைத் திருச்சபைக்கு புத்துயிர் அளித்த பெருமை அருளாளர் யோசெவ்வாஸ் அடிகளாரையே சாரும். அவரைத் தொடர்ந்து இலங்கைத் திருச்சபையின் வளர்ச்சிக்குப் பல வழிகளிலும் உதவியவர் புனித இயூஜின் டி மசனட். இலங்கைத் திருச்சபை மட்டில் அவருக்கு அளவு கடந்த கரிசனையும் அன்பும் இருந்ததை அவர் ஆயர் செமெரியாவுக்கு எழுதிய கடிதங்களில் காணமுடிகிறது. ஈழ மண்ணில் அமலமரித் தியாகிகள் கால் பதித்து ஏறத்தாழ 164 வருடங்கள் கடந்து விட்டன. இவர்கள் நற்செய்திப் பணி, சமூகப் பணி, கல்விப் பணி, உருவாக்கற் பணி என தனி மனிதர்களையும், சமூகங்களையும் கட்டியெழுப்பிய சிற்பிகளாகத் திகழ்கிறார்கள். அமலமரித் தியாகிகளின் வாழ்வும் பணியும் இயக்கம் பெறுவதற்கு பின்புலமாகவும் அவர்களது இதயத் துடிப்பாகவும் விளங்கியவர் புனித இயூஜின் டி மசனட். அவர் எமது மண்ணையும் மக்களையும் மிகவும் அன்பு செய்த ஒரு புனிதராவார். இன்று இருதய நோயினால் அவதிப்படும் பல்லாயிரக்கணக்கான மக்கள் தங்கள் நோயிலிருந்து குணம் பெறுவதற்காக இப்புனிதரின் உதவியை நாடி வருகிறார்கள். இதனால் இருதய நோயினால் பாதிக்கப்பட்ட நோயாளிகளின் பாதுகாவலராக இவர் அடையாளம் காணப்படுகிறார். இவ்வருடம் எமது புனிதரின் விண்ணகப்பிறப்பின் 150 வருட நிறைவு உலகம் முழுவதும் சிறப்பாக நினைவுகூரப்படுகிறது. குறிப்பாக வடமாநில அமலமரித்தியாகிகள் தமது நிறுவுனரின் விழாவை இவ்வருடம் முழுவதும் அர்த்தமுள்ள வகையில் கொண்டாடத் திட்டமிட்டிருக்கிறார்கள. இலங்கை கத்தோலிக்க கிறிஸ்தவர்களாகிய எங்கள் மட்டில் அதிக அக்கறையுள்ளவரும், அதிகம் நேசித்த வருமான, இப்புனிதரை நினைவுகூர்ந்து, அவர் வழியாக இயேசுவின் அன்பை சுவைத்து மகிழ்வோம். புனித இயூஜினின் பரிந்துரை மூலமும், அமலமரித் தியாகிகளின் பணியின் மூலமும் நாம் பெற்ற நன்மைத்தனங்களுக்காக இறைவனுக்கு நன்றிகூறி, அவரது விண்ணகப் பிறப்பை அர்த்தமுள்ள வகையில் சிறப்பிப்போம்.

# கிறிஸ்துவின் விம்பம் புனித இயூஜின்



"கடவுள் வடிவில் விளங்கிய அவர் கடவுளுக்கு இணையாயிருக்கும் நிலையை வலிந்து பற்றிக் கொண்டிருக்க வேண்டியதொன்றாகக் கருதவில்லை. ஆனால் தம்மையே வெறுமையாக்கி அடிமையின் வடிவை ஏற்று மனிதருக்கு ஒப்பானார். மனித உருவில் தோன்றி சாவை ஏற்கும் அளவிற்கு அதுவும் சிலுவைச் சாவையே ஏற்கும் அளவிற்கு கீழ்ப்படிந்து தம்மையே தாழ்த்திக் கொண்டார்" *(பிலி. 02:6-8)* எனும் கூற்றிற்கிணங்க எம் ஆயர் புனித இயூஜின் டீ மசனெட்டும் உயர் பிரபுக்கள் வம்சத்திலே தோன்றிய ஓர் பிரபு; இவர் எவ்வாறு இறைமகன் யேசு தம் மந்தைகள் மேல் பரிவு கொண்டு தன்னை சாதாரண மனிதனாக தாழ்த்தி மக்களோடு மக்களாக பணி செய்தாரோ அதே போன்று பிரபு எனும் அந்தஸ்திலிருந்து தன்னை தாழ்த்தி தானும் மக்களோடு மக்களாக வாழ்ந்து பணி செய்தார்.

மேலும் யேசு, "உலகின் ஒளி நானே, என்னைப் பின் தொடர்பவர் இருளில் நடக்க மாட்டார். வாழ்வுக்கு வழி காட்டும் ஒளியைக் கொண்டிருப்பார்" *(யோவா. 8:12)* என்ற இறை வார்த்தைக்கு இணைந்ததாக தன்வாழ்வையும் ஓர் எரியும் திரியாக மாற்றி பிறரது இருள் நிறைந்த துன்பகரமான வாழ்விற்கு ஒளியூட்டும் வாழ்வாக தன் வாழ்வை அமைத்ததோடு தன் சீடர்களாகிய சக குருக்களுக்கும் வாழக்கற்றுக் கொடுத்தார். இதனாலேயே ஆயர் அவர்கள் தன்பணி தொடரும் துறவிகளையும் பிறரது வாழ்விலே எரியும் திரிகளாக வாழும்படி அழைப்பு விடுக்கின்றார்.

"நீங்கள் கடவுளுக்கும் செல்வத்திற்கும் பணிவிடை செய்ய முடியாது" *(லூக். 16:13)* என்ற வாக்கிற்கிணங்க, இயேசுவின் நிலை வாழ்வை பெற விரும்பிய இளைஞனிடம் காணப்பட்ட சொத்துக்கள் உடமைகளைப் போன்று செல்வம் படைத்தவர் ஆயர் இயூஜின். இவர் தன்னிடமுள்ள அனைத்து சொந்த உடமைகளையும் துறந்து விட்டு புரட்சியிற் பூத்த பூவாக மக்கள் மத்தியில் எடுத்துக்காட்டான துறவியாக வாழ்ந்தார். குறிப்பாக "வறுமையிலும் வாழத் தெரியும் வழமையிலும் வாழத் தெரியும்" என்ற பவுலின் கூற்றிற்கேற்ப, தானும் அதிகமாக ஏழ்மை எனும் அணிகலன்களை அணிந்து, எளிய வாழ்வினூடாக நற்செய்தியை பிறருக்கு எடுத்துரைத்தார்.

மேலும் இவர் வாழ்வை சிறப்பித்து கூறுகின்ற போது, யேசு எவ்வாறு ஏழைகள், கைவிடப்பட்டோர், அநாதைகள், கைம்பெண்களை தேடிச் சென்று அவர்கள் தேவைகளை நிவர்த்தி செய்து, இறையரசை அம்மக்களிடத்தே எடுத்துரைத்து அவர்களை ஆறுதல் படுத்தினாரோ, அவ்வாறே ஆயர் இயூஜினும் ஏழைகள் பால் தணியாத தாகங்கொண்டார். வறியோர் என்ற சொல் உறுதியுள்ள அவரது உள்ளத்தை உருகச் செய்து விடும். இச் சொல்லைக் கேட்டதும் ஆயர் முடியாததையும் செய்ய முயல்வார், இல்லாததையும் கொடுக்க விளைவார். இவ்வாறாக ஏழைகள் பால் அளவிட முடியாதளவிற்கு இரக்கமும், பேரன்பும் கொண்டிருந்தார். இதனாலேயே "எளியோருக்கு நற்செய்தி" *(எசா. 61:1)* என்ற விருது வாக்கை தன் அ.ம.தி. சபையின் விருது வாக்காகத் தெரிவு செய்தார்.

இவற்றோடு, இறைமகன் கிறிஸ்து தன் பணிக்காலமாகிய மூன்று வருட காலத்தில் தனது சீடர்களுக்கு கற்றுக் கொடுத்து, பயிற்சியளித்து, இறை ஆவியைப் பொழிந்து "நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள். தந்தை மகன் தூய ஆவியார் பெயரால் திருமுழுக்கு கொடுங்கள்" என தனது பணியை தொடர்ந்து மக்கள் மத்தியிலே செயற்படுத்த அவர்களை அனுப்பியது போன்று, ஆயரும் தனது வழி வரும் குருக்கள், அருட்சகோதரர்கள் எவ்வாறான வாழ்வு வாழ வேண்டுமென, பல வாழ்வின் நெறிகளை ஒழுங்கமைத்து அவர்களுக்கு உரிய பயிற்சி வழங்கி, எங்கெல்லாம் வறியோர், துன்புறும் மக்கள் வாழ்கிறார்களோ, அங்கங்கெல்லாம் நேசக் கரம் நீட்ட உலகின் பல பாகங்களுக்கும் துறவிகளை அனுப்பினார். இவ்வாறாகத்தான் இலங்கை தேசத்திற்கும் அ.ம.தி. வருகை தந்தனர்.

அதாவது, மேதகு ஆயர் பெற்றக்கினி காலத்தில் எம் நாட்டில் மக்களை வழிநடத்துவதற்கு குருக்கள் போதாமையினால், ஆயர் அவர்கள் புனித இயூஜின் ஆண்டகையிடம், வறுமையிலும் வறுமையாக இலங்கை தேசத்தில் மக்கள் வாழ்கின்றனர், அவர்களுகசூப் பணி செய்ய குருக்கள் தேவையென்று வேண்டியவிடத்து, உடனே ஆயர் இயூஜின், அருட்திரு. செமேரி யாவின் தலைமையில் : ஜோசவ் சியாமின், லூயி கீற்றிங், சகோதரர் கஸ்பார் டி ஸ்ரெவானிஸ் ஆகியோரை 1848 மாசித்திங்கள் நான்காம் நாள் யாழ் மண்ணிற்கு அனுப்பி வைத்தார். அன்றிலிருந்து இன்று வரை அ.ம.தி. சபையினரின் பணி இங்கு தொடர்வது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

மேற்குறித்த கருத்துக்களோடு ஒப்பிட்டு நோக்கும் போது, தந்தையாகிய இறைவனும் மகனாகிய கிறிஸ்துவும் இணைந்து தூயஆவியின் ஊட்டத்தால் செயலாற்றியது போன்று கிறிஸ்துவும். ஆயர் இயூஜினும் இணைந்து செயலாற்றினர் என்பது தெளிவாகின்றது. இதனாலேயே கிறிஸ்துவின் வாழ்வில் காணப்பட்ட சிறந்த வாழ்க்கை முறைகள், ஆயரினது வாழ்விலும் மிளிர்ந்தன. ஆகவே இவற்றிலிருந்து புனித இயூஜின் டி மசனெட் கிறிஸ்துவின் விம்பம் என்பது எமக்கு தெளிவாகின்றது.

**ஆக்கம்: பீ.பிரகாஷ் நிஜந்தன்.**
**புனித வளனார் சிறிய குருமடம்,**
**கொழும்புத்துறை.**

# எமது நிறுவுனரின்...

**(6ம் பக்கத் தொடர்ச்சி)**

யும் அன்பையும் உணர்ந்து கொண்டார்கள். அது மிகவும் அதிகமாகவும் ஆழமாகவும் இருந்ததைக் கண்டார்கள். 22-12-1825ல் டி மசனட் தனது சபையைச் சார்ந்த அனைவருக்கும் ஒரு புதுப்பித்தல் நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தார். அந்த புதுப்பித்தலின நோக்கம் "தூய கன்னிமரியாளுக்குத் தங்களை தகுதி வாய்ந்த அமலமரியின் மைந்தர்களாக ஒப்புக் கொடுப்பது".

ஆடி மாதம் 13ம் திகதி திருத்தந்தையின் தலைமையிலான மாநாடு நடைபெற்று முடிவுக்கு வந்தது. அதில் எடுக்கப்பட்ட புதிய சட்டங்களுக்கு தங்கள் ஆதரவை வழங்கும் முகமாக அமலமரித் தியாகிகள் குருக்களும் தங்கள் கையொப்பங்களை இட்டபோது அவர்களின் பெயர்களின் பின்னால் அமலமரித் தியாகி எனவும் குறிப்பிட்டிருந்தார்கள்.

**அருட்சகோ. தே. யேசுபாலன்**
**அ.ம.தி**

# அமலமரித் தியாகிகளும் யாழ் மறைமாவட்டமும்

ஒரு பொதுநிலையினர் பார்வையில்

## முகவுரை

தூய பேதுரு எனும் பாறையின் மேல் கட்டப்பட்ட திருச்சபை அழிவுறாமல் இன்னும் உறுதியாக இருக்கின்றது என்று சொன்னால் அதற்கு முக்கிய காரணம் இறைவன், காலத்துக்கு காலம் தகுதியான பணியாளர்களை தனது பணிக்கு அழைப்பதேயாகும். இவ்வாறு திருச்சபைக்கு கிடைத்த பெரும் பொக்கிஷமே அமலமரித்தியாகிகள் எனும் குழுமமாகும். 150 ஆண்டுகளைக் கடந்த நிலையில், இலங்கை திருச்சபையில் குறிப்பாக யாழ் மறைமாவட்டத்தில் இவர்களின் பணிகள் காத்திரமானவையாக போற்றுதற்குரியனவாகவும் அமைந்துள்ளன. இவர்களின் அர்ப்பணம் நிறைந்த உன்னதமான பணிகள் ஊடாக யாழ் திருச்சபையில், இறைமகன் இயேசுவின் இறையாட்சிக் கனவு நிறைவேறியது என்று சொன்னால் அது மிகையாகாது.

## நிறுவுனர் தூய இயூஜின் டி மசனெட்

அமல மரித்தியாகிகளின் நிறுவுனர், தூய இயூஜின் டி மசனெட், பிரான்ஸ் நாட்டிலே 1782ம் வருடம், ஆவணி மாதம் முதலாம் திகதி இவ்வுலகில் அவதரித்தார். 1811ல் குருவாக அருட்பொழிவு பெற்ற இவர் ஐந்து ஆண்டுகள் நிறைவின் பின் அ.ம.தி துறவற சபையை நிறுவி, ஏழைகளுக்கு நற்செய்தி அறிவிக்க எனும் விருதுவாக்கை தேர்ந்து கொண்டார். கிறிஸ்துவின் வழிநின்று இறையரசை அறிவித்து, சுதேச குருக்களை உருவாக்குவதில் முன்னின்று உழைத்த இக்குழுமம், இலங்கை உட்பட 68ற்கு மேற்பட்ட நாடுகளில் பணிபுரிகின்றது என்பது பெருமைக்குரிய விடயமாகும். 1832ம் ஆண்டு ஆயராக அருட்பொழிவு பெற்ற இவர் 1861 வைகாசி 21ம் நாள் இறைபதம் அடைந்தார். 19.10.1975ல் திருத்தந்தை 6ம் சின்னப்பரால், அருளாளர் நிலைக்கு உயர்த்தப்பட்டவர் 1995ம் ஆண்டு மார்கழி மாதம் 03ம் திகதி முன்னாள் திருத்தந்தை 02ம் யோவான் பவுல் அவர்களால், புனிதர் நிலைக்கு உயர்த்தப்பட்டார்.

## யாழ் மண்ணில் அ.ம.திகள்

விசுவாசத்தின் ஆணிவேராகவும் உத்தம றோமன் கத்தோலிக்க மக்களைக் கொண்டதுமான இலங்கைத் தீவு, அ.மதிகளின் வருகையினால் விசுவாசத்தில் உறுதியும் வளர்ச்சியும் அடைந்தது. யாழ் ஆயர் பேரருட் திரு பெற்றக்கினி ஆண்டகையின் கோரிக்கையின் பேரில் 1848ம் ஆண்டு அ.ம.திகள் சபையைச் சேர்ந்த நான்கு அருட்பணியாளர்கள் இலங்கை வந்தனர். அவர்களின் வருகையினால் யாழ் திருச்சபையின் இறையாட்சிப் பணியில் ஒரு புதிய அத்தியாயம் ஆரம்பமானது என்று சொல்லலாம். அறிமுகமும் பரிச்சயமும் இல்லாத எமது மொழியை கற்று பல்வேறுபட்ட பக்தி முயற்சிகள் ஊடாக பின்னடைந்து போயிருந்த விசுவாசத்துக்கு புத்துயிர் கொடுத்தனர். இன்று யாழ் மறைமாவட்டம் நிறைவான இறைபணியாளர்களைக் கொண்டிருப்பதற்கும் காரணம் அமலமரித்தியாகிகள் இட்ட அடித்தளமே ஆகும்.

அமல மரித்தியாகிகளின் பல ஆயர்கள் யாழ் மறை மாவட்டத்தை சிறப்பாக ஆட்சி செய்து பல சாதனைகள் படைத்துள்ளனர். யாழ் மறைமாவட்ட முதல் சுதேச ஆயர் அதி வணக்கத்துக்குரிய அமரர் ஜெறோம் எமிலியானூஸ் ஆண்டகையும் அமல மரித்தியாகிகள் குழுமத்தை சேர்ந்தவரே. புனித பத்திரிசியார் கல்லூரி, புனித மாட்டினார் சிறிய குருமடம், யாழ் அடைக்கல அன்னை ஆலயம், புனித வளனார் கத்தோலிக்க அச்சகம் ஆகியன இவர்களின் பணிக்கு சான்றாக உள்ளன.

## பிரான்ஸ் நாட்டின் பெரும் பொக்கிஷம்

எமது மண்ணில் பிறக்காவிட்டாலும் எமது மண்ணுக்காகவும் மக்களுக்காகவும் பணிபுரிந்த பிரான்ஸ் தேசத்து துறவியாகிய அருட்சகோ. யூஜின் குருசோ அ.ம.தி. அவர்களும் குறிப்பிடக்கூடியவர். குறிப்பாக யாழ் பேராலயத்தை மையப்படுத்தியே இவரது பணி அமைந்திருந்தது. ஆன்மீக வாழ்வில் மக்களை சிறப்பாக வழிப்படுத்திய இவர், அக்காலத்தில் மக்கள் மத்தியில் இருந்த சாதிப் பிரச்சினையையும் அதனால் அவர்கள் எதிர்கொண்ட சவால்களையும் இறைஞானத்தோடு அணுகி மிகவும் சாதுர்யமாகத் தீர்த்து வைத்தார். பல்வேறு விதமான பக்திச்சபைகளை ஏற்படுத்தி மக்களின் ஆன்மீக வாழ்வுக்கும், பணிகளுக்கும் வித்திட்டார். அவற்றில் குறிப்பிடக்கூடியவை புனித வின்சென்ற் டி போல் சபையும், புனித பிரான்சிஸ்கன் 3ம் சபையும் ஆகும். இலங்கையில் புனித வின்சென்ற்டி போல் சபை, யாழ் மறைமாவட்டத்தில் தூய மரியன்னை பேராலயத்தில்தான் முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்டது என்பது பெருமைகுரிய விடயமாகும். இளைஞர்களின் ஆன்மீக வாழ்வுக்காக அயராது உழைத்த இவர் "யாழ்ப்பாண இளைஞர்களின் அப்போஸ்தலர்" என்று அழைக்கப்பட்டதோடு, இவரின் பெயர் பேராலயத்தை அண்டிய வீதிக்கு சூட்டப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

## யாழ் தந்த அ.ம.தி யின் முத்துக்கள்

அமதிகள் சபையில் தம்மை இணைத்துக் கொண்டு துறவறம் பூண்டு அருட்பணியாளர்களாக எம் மண்ணில் பணி புரிந்த பலர் நினைவு கூரப்பட வேண்டியவர்கள். அவர்களில் அருட்பணி நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர், அருட்பணி B.A. தோமஸ் குறிப்பிட்டுக் கூறக் கூடியவர்கள்.

நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் அ.ம.தி. அடிகள் நமது தாய்மொழியாம் தமிழ் மொழி மீது அபரிமிதமான காதல் கொண்டு அம்மொழியைப் பற்றி சிறப்பான ஆராய்ச்சிகள் மேற்கொண்டதோடு யாழ் மறைமாவட்டங்களின் பல பகுதிகளில் ஆலயங்களை அமைத்தும், கல்விக் கூடங்களை நிறுவியும் அரும்பணியாற்றினார். கால் நடையாக யாழ் மறைமாவட்டத்தின் பல பகுதிகளுக்கும் சென்று இவர் விதைத்த விசுவாசமே இன்று பெருவிருட்சமாக வளர்ந்துள்ளது.

அருட்தந்தை B.A. தோமஸ் அ.ம.தி. எம்மண்ணில் பிறந்து இவர் மரியாள் மீது அளவு கடந்த பக்தியும் நற்கருணை ஆண்டவரின் உறுதியான விசுவாசமும் கொண்டு, செபமாலைதாசர் சபை எனும் தியான யோகசபையை ஏற்படுத்தி சாதனை படைத்தார். இச்சபை யாழ் மறைமாவட்டத்தில் மட்டுமல்ல இலங்கையின் ஏனைய மறைமாவட்டங்களிலும் பணியாற்றுவது இச்சபைக்கு கிடைத்த கௌரவமாகும். இறை ஊழியர்கள், நற்கருணை ஆண்டவர் பிரசன்னத்தில், மரியன்னையின் வழியில் இறையாட்சி பணிபுரிகின்றனர்.

## முடிவாக

இன்று யாழ் மறைமாவட்டத்தில் அமல மரித்தியாகிகளின் பணி பாராட்டப்பட வேண்டியதாகும். பல பங்குகள், யாத்திரைத் தலங்கள் இவர்களின் பரிபாலனத்தின் கீழ் இருப்பதும், திருச்சபையின் துயர் துடைப்பு பணியில் ஈடுபடுவதும், அநாதைப் பிள்ளைகளுக்கு ஆதரவாக பணிபுரிவதும் இவர்கள் இன்றும் துடிப்போடு பணிபுரிகின்றார்கள் என்பதற்கு எடுத்துக் காட்டாகும். அத்துடன் யாழ் மறைமவாட்ட குருக்களுக்கு வலது கரமாக இருந்து செயற்படும் இவர்கள் மிகச்சிறந்த மறையுரைஞர் குழுமத்தைக் கொண்டிருப்பதும் எமது மறைமாவட்டத்திற்கு கிடைத்த பெரும் கொடையாகும். இவர்களின் அப்போஸ்தலிக்க பணி எமது மண்ணில் சிறப்பாக முன்னெடுக்கப்பட 'வாழ்த்தி இறையாசீர் வேண்டுவோமாக.

இ.அ.அமலரட்ணம் (அலெக்ஸ்)
யாழ்ப்பாணம்.

# இலங்கையின் வடபகுதியில்...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

டம் கையளித்து, காலத்தின் குறியையும், மக்களின் தேவையையும் அறிந்து அதற்கேற்ப புதிய பணிகளைத் தாம் ஆற்றுவது இவர்கள் சிறப்பு.

## கல்விப் பணி

ஆயர் பெற்றக்கினி வடபகுதியை பொறுப் பேற்ற போது அவரது முக்கிய கவனத்தை வேண்டி நின்றது. கல்விப் பணியாகும். அன்றைய வரலாற்றுச் சூழலிலே குறிப்பாக ஆங்கிலப் பெறுவதிலே கத்தோலிக்கர் மிகவும் பின் தங்கிய நிலையில் காணப்பட்டனர். ஐரோப்பிய அமதிகளின் வருகை கத்தோலிக்க மாணவர்களின் ஆங்கிலக் கல்விச் செயற்பாட்டிற்கும் பெரும் துணையாக அமைந்தது. ஆயர் செமேரியா 1862ம் ஆண்டு யாழ் கத்தோலிக்க மாணவிகளுக்கு ஆங்கிலக் கல்வியையும், உருவாக்கத்தையும், வழங்க திருக்குடும்பச் சபைக் கன்னியர்களை அழைத்தார். இத்துடன் ஒவ்வொரு ஆலயங்களையும் அண்மித்து சுய மொழி பாடசாலைகளையும் ஆரம்பித்து கத்தோலிக்க மக்களின் கல்வி மேம்பாட்டில் கவனம் செலுத்தினார். கல்விப்பணிக்கு ஆயர் போஞ்சின் ஆற்றிய சேவை இலங்கை கல்வி வரலாற்றில் தனியான பதிவுகளைக் கொண் டது.

## மனித நேயப்பணிகள்

இக்காலத்தில் இந்தியாவிலிருந்து தோட்டத் தொழிலாளர் மாதோட்ட பகுதியால் அழைத்து வரப்பட்டனர். இதனால் வடபகுதி வாந்தி பேதி நோயினால் பாதிக்கப்பட்டதுடன் பல உயிர்கள் பலியெடுக்கப்பட்டன. இதன் காரணமாக கடும் பஞ்சமும் நிலவியது. இவ்வேளைகளில் ஆயர்கள் குறிப்பாக ஆயர் போஞ்சின் ஏனைய குருக்கள் ஆற்றிய மனித நேயப்பணி அரசினாலும், பல மக்களினாலும் பாராட்டப்பட்டது. பலர் கிறிஸ்தவ மதத்தை தழுவக்காரணமாக அமைந்தது. மேலும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் பொருளாதார மேம்பாட்டை வளப்படுத்தவும் நற்பழக்கவழக்கங்களை கற்பிக்கவும் மறைபணிப்பாளர் கவனம் செலுத்தினார். இவற்றோடு அன்புப் பணிக்கான அனாதை மடங்களையும் அமைத்தார்கள். 1876ல் ஆரம்பிக்கப்பட்ட பாதுகாவலன் பத்திரிகையும் குறிப்புப் பெற வேண்டிய முக்கிய பணியாகும்.

## அன்னைமரி பக்தி

அமதிகளின் காலத்தில் அன்னைமரிக்கான சிறப்பான பக்தி நாட்டின் எல்லாப் பாகங்களிலும், குறிப் பாக இலங்கையின் வடபகுதியிலும் ஆழமாகவும் அகலமாகவும் வளர்த்துள்ளது என்பதற்கு அன்னையின் பெயரில் எழுப்பப்பட்ட பல ஆலயங்களும், புனிதத் தலங்களும் சான்றாகும். இலங்கையின் எல்லாப் பாகங்களிலிருந்தும் பக்தர்கள் அன்னையின் அருள் வேண்டி ஒன்று கூடும் மருதமடுத் திருத்தலத்தின் வளர்ச்சியில் அமதி ஆயர்களும் குருக்களும் அளப்பரிய பங்காற்றியுள்ளார்கள்.

## வரலாற்று நாயகர்கள்

அமதிகளின் சபை வரலாற்று நாயகர்களையும் உருவாக்கியுள்ளது. அருட்திரு B.A. தோமஸ் ஆண்களுக்கும், பெண்களுக்குமான துறவற சபைகளை ஆரம்பித்து ஆழ்நிலைத் தியான ஆன்மீகத்தின் மேன்மையையும், தேவையையும் பலப்படுத்தியுள்ளார். பல்துறை விற்பனராகத் தோன்றியவர் நல்லூர் சுவாமி S. ஞானப்பிரகாசர். இவர் பங்கு நிர்வாகம், மறைபரப்புப் பணி, தமிழ்ப் பணி, இலக்கியப்பணி, மொழி ஒப்பியல் ஆய்வு, வரலாற்று ஆய்வு எனப் பல துறைசார் புலமையுள்ளவராக விளங்கி சபைக்குப் பெருமை ஏற்படுத்தினார்.

## வடபகுதியில் சபையின் வளர்ச்சி

கடந்த 150 ஆண்டுகள் வடபகுதியில் சபையின் வளர்ச்சி பல்பரிமாணங்களைக் கொண்டு விளங்கியது. படிப்படியாகப் பணியாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து பணியாளர் தொகை மாறியதோடு காலத்தின் தேவைக்கேற்ப பணியின் பரிமாணங்களும் மாறின. வடபகுதியில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் சபையின் பரிமாணங்களும் மாறின. வடபகுதியில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் சபையின் துறவற இல்லங்கள் பல ஆரம்பிக்கப்பட்டன. 1961இல் அமல உற்பவம் "நற்செய்தி உரைப்போர்" இல்லமும், 1969இல் அமல உற்பவம் ஓய்வு பெற்ற குருக்களுக்கான இல்லமும, 1970 இல் சபையின் சிறிய குருமாணவர் பயிற்சி இல்லமும், 1982இல் பல் சேவை நடுவகமாக தொடர்பகமும், கடந்த வருடத்தில் மன்னார், வவுனியா ஆகிய இடங்களில் துறவற இல்லங்களும், சபையின் பெரிய குருமட மாணவர்க்கான பயிற்சியகமும் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டன. இவை எல்லாவற்றையும் உள்ளடக்கிய வளர்ச்சியின் நிறைவை துலாம்பரப்படுத்துவதாக 1989ம் ஆண்டு யாழ் அமதிகள் மாகாணம் நிறுவப்பட்டது.

## இன்று

இன்று அமதிகள், நற்செய்தி உரைப்பது, ஞான ஒடுக்கம், மகா ஞான ஒடுக்கம் நடத்துவது, பங்குகளை நிர்வகிப்பது, பாடசாலைக் கல்வி, பல்கலைக் கழகக் கல்வி புகட்டுவது, உளவள ஆற்றுப்படுத்தல், கருத்தரங்குகள், வைத்திய சாலை ஆன்மீகப் பணி, சிறுவர் பராமரிப்பு எனப் பல்பரிமாணப் பணிகளை ஆற்றுகின்றனர். இவற்றுடன் யாழ் உபமாகாணத்திலிருந்து மறைபரப்பாளர்களாக இந்தியா, பாகிஸ்தான், வங்காள தேசம். கொரியா போன்ற நாடுகளுக்கு நற்சயெ்தி பறைசாற்றச் செல்வது சபை நிறுவுனரின் எதிர்பார்ப்பைப் பெரும் அளவில் நிறைவு செய்வதாகும். இவ் வேளையில் இவர்கள் பணி மேலும் சிறக்க இறை அருள் வேண்டி வாழ்த்துகின்றோம்.


# அமலமரியின் மறைபரப்புச் சபை


அமலமரித்தியாகிகள் சபையினரின் குடும்பத்தில் பொதுநிலையினரும் இணைந்து கொள்ளும் சந்தர்ப்பத்தை இச்சபை வழங்குகிறது. உங்கள் செபங்கள், தியாகங்களுடன் இணைந்த பணிகள், குருமாணவ உருவாக்கலுக்காக வழங்கும் நன்கொடைகள் இச்சபையில் சேருவோர் அளிக்கு காணிக்கைகளாகும். வாழ்வோர் மட்டுமல்ல, இறந்தோர் பெயரால் வழங்கும் நன்கொடை (நித்திய பூசை) அமரத்துவம் அடைந்த உங்கள் அன்பானவரையும் இச்சபையினர் பெறும் இவ் இறையாசீருக்கு உரிமையுடையவர் ஆக்குகிறது.

ஒரு குருமாணவனது உருவாக்கத்திற்கான நிதி உதவி வழங்கி, அவரை உங்கள் குடும்பத்தின் பிள்ளையாக சுவிகரித்து கொள்ளலாம்.

அமலமரித் தியாகிகளின் செபங்களினதும், திருப்பலியினதும், பணிவாழ்வினதும் நற்பயன்கள் இச்சபையில் சேர்ந்து கொள்வதனால் உங்களுக்கும் கிடைக் கட்டும்.

இவ்வாறக பொதுநிலையினரும் சபைவாழ்விலும், பணியிலும், நோக்கங்களிலும், செபங்களிலும் இணைந்து வாழ்கின்றார்கள்.

ஆயர் இயூஜினின் இறையரசுப் பணியில் சமகாலத்திலே இணைந்திடுவோம்.



தொடர்பு கொள்ள: M.A.M.I. - இயக்குனர்,
அருட்பணி. A. அந்தோனிமுத்து அ.ம.தி.
வசந்தகம், சுவாமியார் வீதி - கொழும்புத்துறை.

# "இன்னும் சில விதைகளோ நல்ல நிலத்தில் விழுந்தன. அவை வளர்ந்து நூறு மடங்கு விளைச்சலைக் கொடுத்தன" [லூக். 8:8]

## "ஆசியாவின் சுடர்விடும் விடிவெள்ளி"

அருட்பணி. ஜோசப் செல்வன் செ.தா.
அருள் ஆச்சிரமம்,
5, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.

"நீர் என் மைந்தர், இன்று நான் உம்மைப் பெற்றெடுத்தேன், என்றும் நான் அவருக்கு தந்தையாய் இருப்பேன், அவர் எனக்கு மகனாய் இருப்பார்" *(எபி. 1:5)*

இறை பணிக்கென ஆட்களைத் தெரிந்தெடுப்பதும் மறையினை வளர்க்க அவர்களைக் காலத்துக்குக் காலம் அனுப்பி வைப்பதும், இறைவன் தமது திருவுளத்திற்கேற்ப தொன்று தொட்டு செய்து வருகின்ற காரியமாகும். இயேசு ஆண்டவரால் "கேபா" என அழைக்கப்பட்ட புனித இராயப்பரின் அழைப்புத் தொடக்கம் அண்மையில் முத்திப்பேறு பட்டம் அளிக்கப்பட்ட புனித பாப்பரசர் 2ம் அருள் சின்னப்பர், இன்னும் இன்றைய காலம் வரைக்கும் திருச்சபையிலே அங்கம் வகிக்கும் எல்லாக் குருக்கள் துறவியர் கன்னியர் வரை ஆண்டவரின் இந்த அழைப்பு முறை தொடர்கிறது.

இவ்வாறான மகத்தான இறை அழைப்புப் பணியிலே "புரட்சியில் பூத்த புதுமலராக", எமது திருச்சபைக்கு "அமல மரித்தியாகிகள்" என்னும் வேத போதக விருட்சத்தினை அளித்த அன்புத் தந்தை இயூஜின் டி மசனட் அடிகளாருடைய விண்ணக வெற்றிப் பிறப்பின் 150வது ஆண்டின் நிறைவினை வெகு விமரிசையாக கொண்டாடும் அமல மரித்தியாகிகள் அனைவருக்கும் எமது உளம் நிறை பாராட்டையும், தொடர்ச்சியான செபத்தில் நிறை வாழ்த்துக்களையும் கூறி நிற்பதில், "செபமாலைத் தாசர்" சபையினராகிய நாம் அனைவரும் பெரு மகிழ்ச்சி அடைகின்றோம்.

இயேசு ஆண்டவரின் மீது தணியாத தாகம் கொண்ட அமல மரித்தியாகிகள், உலகம் முழுவதும் இறைவனுடைய அரசினை நிலை நாட்ட, அரும் பாடுபட்டு உழைத்துக் கொணடிருக்கின்ற இந்த நவீன யுகத்திலே, இவர்களுடைய துறவற குடும்பத்தினுடைய நிறுவுனர் புனித இயூஜின் டி மசனட் அடிகளாருடைய 150வது விண்ணகப் பிறப்பு விழா, இவர்களுடைய நீண்டகால வரலாற்றிலே இன்னுமொரு புதிய அத்தியாயத்தினை ஆரம்பிக்கும் என்பதில் எள்ளளவேனும் ஐயமில்லை.

எமது இலங்கைத் திருநாட்டின் பணித்தளங்கள் எல்லாம், அமல மரித்தியாகிகளின் பாதம்பட்ட இடம் என்றால் அது மிகையாகாது. இலங்கையில் அமல மரித்தியாகிகள் கால்பதித்து இற்றைக்கு 163 ஆண்டுகள் ஆகிவிட்டாலும், தமது நிறுவுனரின் வழியில் அமல மரித்தியாகிகள் ஆற்றுகின்றபணிகள் எண்ணிலடங்காதவை.

இலங்கைத் திருநாட்டின் கத்தோலிக்க, சமூக, பொருளாதார, கலாச்சார, கல்வி வளர்ச்சியில் அமல மரித்தியாகிகளின் பணிகள் காலத்தின் பொன்னேட்டில் பொறிக்கப்பட வேண்டியவை. இவர்களின் ஆர்வம் மிகுந்த தியாகப் பணிகளினால், அத்திவாரம் இட்டு எழுப்பப்பட்ட எத்தனையோ கல்லூரிகள், தொண்டு நிறுவனங்கள் இன்று வானளாவ வளர்ந்து புகழ் பூத்து நிற்பது இவர்களது பணிக்கான சான்றாகும்.

இவ்வாறான சாதனைச் சரித்திரத்தை, துல்லியமான சான்றுகளோடும், சாட்சியங்களோடும், சாதனைகளோடும், பல சவால்களை வென்று பெற்ற வெற்றிக் களிப்போடும் உற்று நோக்குவது, அமல மரித்தியாகிகள் கடந்து வந்த பாதையில் மிக முக்கியமானதொன்றாகும். இன்றும் சூறாவளியினைப் போன்று, சுனாமிப் பேரலை போன்று துறவறத்திற்கும் அர்ப்பண வாழ்விற்கும் எதிரா தமைச் சூழ எழுகின்ற எல்லாச் சவால்களையும், ஒரு சிறு குழந்தையின் புன்சிரிப்போடு எதிர் கொள்ளும் அமல மரித்த தியாகிகளின் நிறுவுனருடைய இறைவரம் மகத்தானது "வாழ முடியாதவர்களுக்கு ஒரு வழி, வாழத் தெரிந்தவர்களுக்கு பல வழி" எனும் முதுமொழிக்கேற்ப, பல கதவுகள் மூடிக் கொள்ளும்போது இன் னும் பல புதிய கதவுகளைத் திறக்க வைக்கும், இறை விசுவாசத்தோடு கூடிய மனத் தைரியம் எனும் அலாதியான சாவி இவர்களிடம் தான் உண்டு.

### துறவற சபையின் விளைநிலம்

அமல மரித்தியாகிகள், "கழுத்தில் சிலுவை போட்ட சுவாமிமார்" என்று சொல்லும்போது, இன்று கூட கண்களை மேலே உயர்த்தி, கரங்களைக் கூப்பி, தமது பசுமையான விசுவாச நிகழ்வுகளுக்குள்ளும் இறை அனுபவங்களுக்கும் மூழ்கிப்போகும் எத்தனையோ வயது முதிர்ந்தவர்களை நாம் எமது சமுதாயத்தில் காணலாம். இந்த அருள் நிலைக்கு காரணமாக இருந்தவர்கள், பிற நாடுகளில் இருந்து இங்கே வருகை தந்து எமது கலாச்சாரங்களை, பண்பாடுகளை, மொழியினை திறம்படக் கற்றுத் தேர்ந்து உண்மையான "மிசனரிகளாக" வாழ்ந்து காட்டிய அமலமரித்தியாகிகளேயாவர்.

இவ்வாறான, இவர்களுடைய சாட்சிய வாழ்க்கைக்கு சான்றாக பல ஊர்களில், அமல மரித்தியாகிகள் பலருக்கு மக்கள் சிலை வைத்து வணக்கம் செலுத்தி வருவதனைக் காணலாம். இவ்வாறு அமல மரித்தியாகிகளுடைய வாழ்வு எப்போதுமே பன்முக நோக்கம் கொண்டதாக அமைந்திருப்பதனைக் காணலாம். பல பணி நிலைகளில் வேலை செய்கின்றபோது, சமுதாயத்தில் இன்னும் தேவையாக இருக்கும், விட்டுப் போன பல பணிகளுக்கான முன்னெடுப் புக்களை மேற்கொள்வதும், இவர்களது பணி வாழ்க்கையிலோர் அங்கமாக கரு தப்பட்டது. இவ்வாறான முன்னெடுப்புக் களின் போது பல துறவற சபைகளின் தோற்றத்திற்கும் முன்னேற்றத்திற்கும் இவர்களது வாழ்க்கை வழிகோலியது.

### "உதிக்கும் விடிவெள்ளி" (செபமாலைத் தாசர் சபையின் ஆரம்பம்)

செபமாலைத்தாசர் சபையினை ஆரம்பித்த தவத்திரு வஸ்தியாம்பிள்ளை அந்தோனி தோமஸ் அ.ம.தி அடிகளார் 07-03-1886ல் யாழ் நகரின் பாண்டியன் தாழ்வு என்னும் சிற்றூரில் பிறந்தார். பிறந்த அன்றே, இறந்து விடுவாரோ என்ற அச்சத்தில் அவருக்கு திருமுழுக்கு கொடுக்கப்பட்டது. பல நோய்கள் அவரை விடாமல் துரத்தினாலும், இறைவனின் திட்டம் அவரை ஒரு குருவாக, அமல மரியின் தியாகியாக அழைத்தது. குருமட வாழ்விலே பலவகையான பயிற்சிகளை முடித்து, 06- 01- 1912ல் இறைவனின் குருவாக, அப்போதைய யாழ் மறைமாவட்ட ஆயர் மேதகு ஜுலியன் ஆண்டகையால் குருவாக அபிஷேகம் செய்யப்பட்டார்.

குருவாகிய பின்னர் இவரது உடல் நலக்குறைவின் காரணமாக, அவர் ஆயரால் புனித பத்திரிசியார் கல்லூரியில் இந்து மாணவர் விடுதிக்கு பொறுப்பாக இருந்து கவனிக்கும்படி அனுப்பப்பட்டார். இவரது முன்மாதிரிகையான துறவு வாழ்வினால் கவரப்பட்ட இந்து மாணவர்கள் பலர், எமது வேதத்தினை தழுவி வரலாற்றில் பெயர்போன குருக்களாக ஆகினர். இவர்களுள் அருட்தந்தையர்களான தார்சிசியஸ் ஐயாத்துரை, பாலசுந்தரம் என்பவர்கள் பெயர் குறிப்பிட்டுக் கூறக்கூடியோர் ஆவர்.

### "ஆவியில் பகிர்வும் அழைப்பின் பயனும்"

புனித பத்திரிசியார் கல்லூரிப் பணி நாட்களிலே, பெல்ஜியம் நாட்டில் இருந்து வருகை தந்து கல்விப் பணியாற்றிக் கொண்டிருந்த அருட்திரு. A.J. கியேமர் அ.ம.தி. அடிகளாருக்கும் தோமஸ் அடிகளாருக்கும் நல்ல நட்பு உருவாகியது. பல வேளைகளில் பேசிக் கொண்டிருபபார்கள். அவர்களுடைய உரையாடல்கள் எப்போதும் இந்தியா, இலங்கையின் மனமாற்றத்தினைப் பற்றியும் அவ்வாறு மனமாற்றம் வேண்டிச் செபிக்கும் காட்சித்தியான துறவற சபைகள் ஆசியாவில் தோற்றம் பெறவேண்டும் என்பதனைப் பற்றியதாகவே இருக்கும்.

### புதிய மறைமாவட்ட ஆயர்

1923ம் ஆண்டு J.A. கியோமர் அ.ம.தி. அடிகளார் யாழ் ஆயராக நியமனம் பெற்று 1924 மார்ச் மாதம் 9ம் நாள் ஆயராக அபிஷேகம் செய்யப்பட்டார். ஆயர் கியோமர் ஒரு முற்போக்கு சிந்தனைவாதியாகவும் எதிர்காலத்தினை கணக்கிட்டு கருமமாற்றுபவராகவும் இருந்த படியால், தன்னுடைய மறை மாவட்டத்தில் இருந்து கொண்டு காட்சித்தியான வாழ்வால் இறைவரம் வேண்டிச் செபிக்கும் துறவற சபையின் தோற்றம் இடம் பெற வேண்டும் எனும் தணியாத தாகம் தன்னகத்தே கொண்டவராக இருந்தார். இந்த தாகத்தைத் தணிக்கும் நீர்ச்சுனையைப்போல உரோமைப் பேராயத்தின் செய்தி ஆயரது கரங்களை வந்தடைந்தது.

### "Rerum Ecclesiae" (திருச்சபை பற்றிய உண்மைகள்)

மறைபரப்பின் பாப்பரசர் என அழைக்கப்பட்ட திருத்தந்தை 11ம் பத்தினாதர் "திருச்சபை பற்றிய உண்மைகள்" என்னும் ஆழமான எதிர்காலத் திருச்சபையை தளரவிடாது தாங்கிப் பிடிக்க பல காட்சித் தியான சபைகளின் தோற்றம், செபிக்கின்ற துறவிகளின் தோற்றம் பற்றியும், பணி செய்வோர் எவ்வாறு செப உதவியை நாடி நிற்க வேண்டும் எனபதனை மையப் பொருளாகக் கொண்டும் எழுதப்பட்டிருந்தது. திருச்சபையில் பலவேறு பணியாளர்கள் பெருகிக் கொண்டிருந்த அவ்வேளையில் அயராது பாடுபடும் பணியாளர்களை காட்சித்தியான உபவாச செபத்தினால் உரமூட்டி உற்சாகப்படுத்தும் சபைகளின் தோற்றம் கீழைத்தேய, குறிபபாக ஆசியாவில் இன்றியமையாத தேவை என்பதனை அந்த திருமடல் குறித்துக்காட்டி நின்றது.

### "செபமாலைத் தாசர் பிறப்பு விழா"

திருத்தந்தை 11ம் பத்தினாதர், ஆயர் ஜே.ஏ. கியோமர், அருட்தந்தை பி.ஏ. தோமஸ் எனும் இந்த மாபெரும் மூன்று இறை மனிதரின் உள்ளங்களை ஒரே சமயத்தில் பற்றி எரியச் செய்தது தூய ஆவியானவரின் தூண்டும் வரம் தான் என்பதனை நாம் துல்லியமாகச் சொல்லமுடியும். தவத்திரு தந்தை வ.அ. தோமஸ் அடிகளாரும் ஆயர் கியோமர் ஆண்டகையும் தாம் புனித பத்திரிசியார் கல்லூரியில் இருக்கும்போது கலந்துரையாடியவற்றின் சாராம்சத்தினை இவ்வேளையில் நினைவு கூர்ந்து பூரித்து நின்றனர். அத்தோடு ஆயர் கியோமர் இவ்வாறான காட்சித்தியான யோக சபையை வழிநடத்திச் செல்லும் நல்ல கப்பல் தலைவனைத் தேடியபோது, எத்தனையோ திடகாத்திரமான, சுகதேகிகளான, படித்த பல களங்களில் வேலை செய்த குருமார் இருந்தபோதும் அவரது மனம் இறுதியில் தோமஸ் அடிகளாரிடம் மட்டுமே வந்து நின்றது. ஆயர் அவரையே அந்த அலுவலைச் செய்யச் சொன்னார். தோமஸ் அடிகளார் திகைத்து நின்றார். ஆனால் ஆயர் எடுத்த முடிவில், அவர் காட்டிய வைராக்கியம் தோமஸ் அடிகளாரை "இதோ உமது அடிமை உமது வார்த்தையின் படியே எனக்கு ஆகட்டும்" என்னும் மரியன்னையின் வழியில் இறைவனிடம் புகும்படி செய்தது. "இறைவனுக்கு நிகர் யார்", எனும் புனித மிக்கேல் தேவதூதனுடைய வாக்கினை தமது வாழ்வினால் வாழ்ந்து காட்ட "தாழ்ச்சி" எனும் ஆழத் தோண்டப்பட்ட பாறையில் தமது காட்சித்தியான வாழ்வு எனும் கட்டடத்தினைக் காட்டுகின்றார்.

இவர் இவ்வாறு கட்டடம் கட்ட, ஆயரவர்கள் தோலகட்டி எனும் கற்பூமியைக் கொடுக்கின்றார். 1927ம் ஆண்டு ஆகட்ஸ் மாதம் முதல் நாள் கிறிஸ்தோபர், டலிமா என்னும் இரு இளைஞருடன் சிற்றூராகிய தோலகட்டியை சென்றடைந்து பல்வேறு ஞான ஆயத்தங்களின் பிற்பாடு 1928 பெப்பரவரி 2ம் நாள் யாழ் ஆயர் மேதகு கியோமர் ஆண்டகையின் ஆசீருடனும் அவரது அதிகார பூர்வமான அனுமதியுடனும் செபமாலைத்தாசர் சபையை ஆரம்பித்து உவகையால் வளம் குளிர்ந்து நின்றார் தோமஸ் அடிகள்.

### "விழுதுகள் விடும் விருட்சம்"

தோலகட்டி என்னும் "கற்பூமியில்" இரு துறவிகளோடு உருவான இந்தச் சின்னஞ்சிறிய காட்சித்தியான துறவற சபை "சிறுதுளி" பெருவெள்ளமான கதையாக, பல்வேறு பிரச்சனைகள், பின்னடைவுகள், அடக்குமுறைகள், ஆக்கிரமிப்புக்களுக்கு முகம் கொடுத்து இன்று வானளாவ வளர்ந்து நிற்கின்றது. இன்று இந்தியாவில், இலங்கையில், கனடா நாட்டில் என்று கிட்டத்தட்ட 30 துறவற இல்லங்களைக் கொண்டு செபப்பணி ஆற்றும் செபமாலைத்தாசர் சபையானது யாழ். மறைமாவட்டத்தில் அமல மரித்தியாகிகளுடைய பணிகளின் பலன் என்றும் யாழ். மறைவமாவட்டத்தின் குழந்தை, யாழ் மறைமாவட்டம் ஈன்ற மாபெரும் கிறிஸ்தவ அடையாளம் அதன் பெருமை என்றும் சொன்னால் அது மிகையாகாது.

### "தாய் மடம் தேடும் தவிப்பு"

32 வருடத்திற்கு மேலாக இலங்கையில் நடந்தேறிய யுத்தம் எமது சமுதாய வளர்ச்சியை, கிறிஸ்தவ விழுமியங்களை, பணித்தளங்களை, பணியாளர்களை, எமது தார்மீக தன்மானத்தை சிதறடித்து சின்னாபின்னமாக்கியது எம் எல்லோருக்கும் தெரிந்ததொன்று. இந்தப்போரில் நாம் இழந்த, ஈடு செய்ய முடியாத இழப்புக்கள் பல. இவ்வாறான குறிப்பிடத்தக்க இழப்புக்கள் மத்தியில் "யாழ் மறைமாவட்டத்தின் கற்பகத்தருவாய், அமைதிப் பூங்காவாய், அனைவரையும் கவர்ந்திழுக்கும் அற்புதத்தளமாய், தவமும் செபமும், காட்சித்தியான கதவடைப்பும் நிறைந்து, வயது வித்தியாசம், சாதி, இனம், நிறம், மொழி கடந்த சர்வதேச ஒற்றுமையோடு அனைவருக்கும் ஆன்மீகப் பெட்டகமாய், தன்பால் கவர்ந்திழுத்திட்ட "தாய்" மடம் தோலகட்டியை, இழந்து நிற்கும் எம் தவிப்பு எல்லா மக்களின் உள்ளங்களிலும் குறிப்பாக எல்லா செபமாலைத் தாசர்களினதும் மனங்களின் ஆழத்திலும், அவர்களின் வாழ்விலும் பிரதிப் பலிப்பதனைக் காணலாம். செபமாலைத்

(தொடர்ச்சி 10ம் பக்கம்)

# புனித இயூஜினின் வாழ்வாலும், போதனையாலும் ஊட்டம் பெற்று, சுடர்விட்டெரியும் திரிகளாவோம்

நிலையில்லாத வாழ்வின் அனுபவங்களுக்குள்ளே, வாழ்வின் அனைத்து சுக போகங்களையும் இலௌகீக நாட்டங்களையும் சுவைத்து அனுபவித்து விட வேண்டுமென்கின்ற முனைப்போடு வாழ்ந்து வருகின்ற மனித குலத்திற்கு, வாழ்வின் யதார்த்தம் இதுதான். நிறைவாழ்வை உரித்தாக்கிக் கொள்ள அவன் பயணிக்க வேண்டிய பாதை இதுதான் என்று வெளிப்படுத்தியதோடு நின்றுவிடாது, இவை அனைத்திற்கும் சிகரம் வைத்தாற் போல் இத்தகைய ஒரு வாழ்க்கைப் பயணத்திலே தமது வாழ்வின் வரலாறுகளை ஆழமாகப் பதித்து, மிகுந்த அர்ப்பணிப்போடு எமக்கு முன்மாதிரி காட்டியவர் எம் நிறுவுனர் புனித இயூஜின் டி மசனெட ஆவார்.

"எவரும் தன்னலம் நாடக் கூடாது, மாறாகப் பிறர் நலமே நாடவேண்டும்" *(1கொரி. 10:24)* எனகின்ற வார்த்தைகளுக்கு உருக் கொடுக்கும் வகையிலே, பல விதமான வேதனைகளுக்குள்ளும் சோதனைகளுக்குள்ளும் சிக்கித் தவித்து, அதிலிருந்து மீணடெழ முடியாதவர்களுககுத் துணையாக உதவிக்கரம் நீட்டியவர் எம் புனிதர்.

அவவிசுவாசப் புயலினால் அலைக்கழிக்கப்படுவோரைக் கரைசேர்க்கும் துடுப்பாக, திக்குத்திசை தெரியாது பரிதவிக்கின்றவர்களுத் திசை காட்டும் விடிவெள்ளியாக, வாழ்க்கைப் பயணத்திலே கொடூர அலைகளினால் அடித்துச் செல்லப்பட்டு, வாழ்விலே ஆட்டம் காண்பவர்களின் வாழ்வைத் திடப்படுத்தி விசுவாச வாழ்வில் அருள் வாழ்வில் ஆழப்படுத்துகின்ற நங்கூரமாகத் தன்னைத் தியாகம் செய்தார்

நீரற்ற நதியாக, உயிரற்ற உடலாக, விசுவாசமற்ற நம்பிக்கையாக வாழப்பட்டுவந்த முரண்பாடான மனித வாழ்க்கை முறையிலிருந்து அவன் விடுபட்டுப் பேரானந்தம் நிரம்பி வழிகின்ற ஒரு நிறைவாழ்வை ஆதாயமாக்கிக் கொள்ளத் தன்னை முழுவதுமாக அர்ப்பணித்தார்.

இவர் தனது வாழ்வின் ஆரம்பம் தொட்டு ஏழைகள், அனாதைகள், ஒடுக்கப்பட்டவர்கள் மட்டிலே ஆழமான அன்பும் அளவிடமுடியாக் கரிசனையும் கொண்டு வாழ்ந்தார். "நீங்கள், தூய உள்ளத்தோடு ஒருவருக்கொருவர் ஆழ்ந்த அன்பு காட்டுங்கள்" (1பேதுரு 2:22) என்ற வார்த்தையின் படியே வாழ்ந்த இவர் ஏழைகளின் அன்பனாக, ஒடுக்கப்பட்டவர்களின் தோழனாக, கைவிடப்பட்டவர்களின் அனாதைகளின் தேற்றரவாளனாக, நண்பனாகத் தம்மை வெளிப்படுத்தி வாழ்ந்தார். ஏழைகளது வாழ்வின் ஈடேற்றமே தனது வாழ்வின் இலக்கு என்னும் கொள்கைப் பற்றோடு வாழ்ந்தார்.

இவ்வாறான தணியாத நோக்கினால் உந்தப்பட்ட இவர் தனது வழிவந்த துறவிகளும் இத்தகைய பண்புகளினால் ஆட்கொள்ளப்பட வேண்டுமென விரும்பினார். "எளியோர்க்கு நற்செய்தி நவில" என்கின்ற விருதுவாக்கினைத் தமது பணிவாழ்வின் ஊக்கியாகக் கொண்டு வாழ முறப்பட்டார். இதனையே தமது சபையின் விருதுவாக்காகவும் மாற்றினார். "உங்களை அழைத்தவர் தூய்மையுள்ளவராய் இருங்கள்" *(1பேதுரு. 2:15)* என்று தமது துறவறத்தவர்கள் தூய வாழ்வில் மிளிர்வதற்கு ஆக்கமும் ஊக்கமும் வழங்கினார்.

"நீங்கள் கனி தரவும், நீங்கள் தரும் கனி நிலைத்திருக்கவுமே உங்களை ஏற்படுத்தினேன்." *(யோவான். 15:16)* என்கினற வார்த்தைகளுக்குள்ளே தனனை அர்ப்பணித்து இறைவனின் திராட்சைத் தோட்டத்திலே எனறும் குறையாது, செழிப்பான கனிகளைத் தோற்றுவித்துக் கொண்டிருக்கும் துறவற சபையை உருவாக்கி இறைவனின் நற்செய்திப் பணியில் தம்மை முழுமையாக ஈடுபடுத்தினார்.

தமது வாழ்வின் மூலமாகப் பிறரும் இறைவனைக் கண்டுகொள்ள வாய்ப்பளித்தார். "உங்கள் ஒளி பிற மனிதர் முன் ஒளிர்க! அப்பொழுது அவர்கள் உங்கள் நற்செயல்களைக் கண்டு உங்கள் விண்ணகத் தந்தையைப் போற்றிப் புகழ்வார்கள்" *(மத். 5:16)* என்கின்ற வார்த்தைக்கு ஒப்ப, பிற மனிதர் முன் தன்னை ஒளியாக மாற்றி இறைவனின் மாட்சியை வெளிப்படுத்தினார். "கடவுளை மகிழ்ச்சிப்படுத்துவதையே எப்போதும் செய்யுங்கள்" என்னும் வார்த்தைகளைத் திருவாய் மொழிந்து தனது ஆழ் மனதின் எண்ணத்தை வெளிப்படுத்தினார்.

"அப்போஸ்தலர்களின் அடிச்சுவடுகளைப் பின்பற்றித் தம்மை அர்ப்பணிக்கக் கூடிய ஆர்வமும் தாராள மனமும் உடையவர்களை என் சபைக்கு அழைக்கின்றேன்" என்று கூறி அப்போஸ்தலர்களின் பாரம்பரியப் போதனை முறை, வாழ்க்கைமுறை எம்மிடையே வாழப்பட வேண்டும் என்பதனை வலியுறுத்தினார்.

ஒரு மனிதனானவன் புனித நிலையைப் பற்றிப் பிடிக்கின்ற படிநிலைகளிலே முதலாவதாக, அவன் ஒரு சாதாரண மனிதனுக்குரிய குணாதிசயங்களைக் கொண்டிருக்க வேண்டும். இரண்டாவதாக, ஒரு கிறிஸ்தவனுக்குரிய வாழ்க்கை விழுமியங்களைக் கைக்கொள்ள வேண்டும். இவ்வாறாக வாழ்க்கையிலே படிப்படியாக முன்னோக்கிச் செல்கின்றபோதுதான் அவன் தனது வாழ்விலே புனிதத்துவத்தை, தூய்மையை அடைய முடியும் எனப் போதித்து மனிதரைப் புனிதராக்க அரும்பாடு பட்டார்.

இவ்வாறாகப் புனிதரின் ஒவ்வொரு போதனையும் வாழ்க்கை முறையும் அவரின் பண்புகளையும் குணாதிசயங்களையும் கோடிட்டுக் காட்டுவதோடு, அவர் குறித்து எமது மனதிலே ஒரு காத்திரமான அபிப்பிராயம் உதயமாவதற்கு உதவுகின்ற, மேல்வரிச் சட்டங்களாக அமைந்து விடுகின்றன, என்பது கண்கூடு. இந்நிலையில், எம் புனிதரின் வாழ்க்கைப் பண்புகளை நாம் சீர்தூக்கிப் பார்த்து அவற்றிற்கு எமது வாழ்வில் சற்றேனும் இடமளித்து, அவை வாழ்வாக்கப்பட அனுமதியளிக்க வேண்டும். அப்போதுதான் எமது புனிதரின் பிறப்பும், வாழ்வும், போதனையும், புனிதத்தன்மையும், நாம் நினைவு கூருகின்ற விண்ணகப் பிறப்பின் 150 வருட நிறைவும் அர்த்தம் பொதிந்த நிகழ்வுகளாக மாற்றம் பெறும்.

ஆகவே, "எரியாத திரிகளால் பயன் என்ன? எரியும் திரிகளாய் இருங்கள்" என்ற புனிதரின் பொன் மொழிகளுக்கு ஆழமாகச் செவிமடுத்து, எமது வாழ்வை உருக்கித் தியாகமாகிப் பிறரது வாழ்வை ஒளிர்விக்க முயல்வோம். "எரியும் திரிகளாய் இருங்கள்" என்ற இந்த இலட்சியக் கனவுடைய வார்த்தை, எமது வாழ்விற்குக் கடினமான ஒன்றாக அல்லது நிறைவேற்றப்பட முடியாத ஒரு சொற் தொடராகத் தென்படினும் எமது வாழ்விலே, எம் புனிதரின் படிப்பினைகளை நாம் நுணுக்கமாக அனுசரிக்கின்ற போது, இந்த இலக்கு சுலபமானதாகத் தென்படும். அப்போது, நாம் எமது புனிதரின் வாஞ்சைக்குப் பன்மடங்கு அதிகமாகத் தூய வாழ்வு நடாத்திப் பிறரை ஒளிர்விப்போம். இது போன்ற தருணங்களில் எமது ஒளியானது வெறுமனே ஒரு திரியின் சுடருக்குள் அடங்கிவிடாது, மாறாக அது பன்மடங்கு வியாபித்து இந்தப் பிரபஞ்சத்தையே ஒளிர்விக்கும் ஞாயிறின் பிரகாசத்தையும் விஞ்சி நிற்கும் பிரகாசமாகப் பொலிவு கொடுக்கும்.

வெ. வொலன்ரைன் மொறிஸ்
புனித வளனார் சிறிய குருமடம்,
கொழும்புத்துறை.

# கிறிஸ்துவின் அழைப்பில் தூய இயூஜின்

ந. அஜந்தன்
புனித வளனார் சிறிய குருமடம்

இப் பாரினிலே பரந்து விரிந்த மக்கள் கூட்டம் அக்கூட்டத்தை வழி நடத்த ஆயன் தேவைப்படுகின்றான். இந் நிலையில் **"நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள் தந்தை மகன் தூய ஆவியின் பெயரால் திருமுழுக்கு கொடுங்கள்"** *(மத. 28:19)* என்ற கிறிஸ்துவின் கட்டளைக்கு இணங்க புனித வெள்ளிக் கிழமை திருச்சிலுவையினை கண்டு இளம் பிரபு இயூஜின் தன் அந்தஸ்தை மறந்து உள்ளம் உருகியவராக பிரான்ஸியப் புரட்சிகால கட்டத்திலே கல்லறை நின்று உயிர்த்த கிறிஸ்துவைப் போல் தன் ஆணவப் போக்கிலிருந்து இளம் மொட்டு ஏழைகள் வாழ்வில் ஒளியேற்றிட மலர்ந்தது.

இயூஜின் தன் இளமைக் காலத்திலே தன் வாழ்வை சக தோழர்களுடனே செலவிட்டார். ஆதலால் பல நிகழ்வுகள், களியாட்டங்களில்இ பங்குபற்றுவதற்கு சந்தர்ப்பம் கிடைத்தது. இருந்த போதும் அவற்றை தவிர்த்து, அத்தனை சுகபோக வாழ்வையும் களைந்து 1808.10.12 இல் பாரிசிலுள்ள புனித சன்ப்பிஸ் குருத்துவக் கல்லூரியில் இணைந்து தன் உருவாக்கப்பயணத்தை முடித்தவராக 1811.12.21 இல் ஆயர் டெனமொன்டோல் அவர்களால் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார்.

இவர் தனக்கென ஓர் சபையை அமைத்தார். **"புறாவான்சின் மறைபரப் பாளர் சபை"** எனும் நாமத்தில் இச்சபை மக்கள் மத்தியில் பெரும்பணி ஆற்றியது. ஆயரின் சேவை மக்களிடத்தே பெரும் பங்கு வகித்தது. இதனால் அழைத்தலும் நாளுக்கு நாள் அதிகரித்தது. இவ்வாறாக இச்சபையினரின் சேவை அதிகம் தேவைப்பட்டதால் 1826.02.17 இல் திருத்தந்தை XIIம் லியோ அவர்களால் அதிகார பூர்வமாக இச்சபை அங்கீகரிக்கப்பட்டு "அமலமரித் தியாகிகள் சபை" எனும் புதுநாமம் சூட்டப்பட்டது. ஆயர் இயூஜின் **"எளியோர்க்கு நற்செய்தி நவில"** எனும் விருதுவாக்கை தம் சபைக்கென தெரிந்தெடுத்து எரியும் திரியாக வாழ்ந்து சக துறவிகளையும் வாழ பயிற்றுவித்தார்.

இயூஜின் பெரும் முயற்சியால் 1832ல் ஆயராக நியமிக்கப்பட்டார். இவர் ஆயரான பின்பும் பல சவால்களை எதிர் கொண்டார். ஆயினும் 1837 – 1861 வரை மக்களோடு மக்களாக மக்களின் ஆயராக செயற்பட்டு பாடசாலைகள், அநாதை இல்லங்கள், ஆலயங்கள், குரு மடங்கள், வைத்தியசாலைகள் போன்றவற்றை நிறுவினார். உலகெங்கும் சென்று ஏழைகளின் வாழ்வை மேம்படுத்த எண்ணியவராக உலகின் பல பாகங்களுக்கும் தன் சபைக் குருக்களை அனுப்பினார். இவ்வாறாகத் தான் 1847ல எம் மண்ணாகிய இலங்கை தேசத்திற்கும் அ.ம.தி வருகை தந்தனர். அன்று தொடங்கிய பணி இன்றும் செயற்பட்டுக் கொண்டு இருப்பதற்கு காரணம் ஆயரின் விடா முயற்சியும் தலைமைத்துவமேயாகும்.

இயேசு தன் தந்தையின் சித்தத்தை முழுமையாக நிறைவேற்றியதால் சிலுவையிலே"எல்லாம் நிறைவேறிற்று" என கூறி உயிர் நீத்ததைப் போல கிறிஸ்துவின் அழைப்பை ஏற்று பூரணமாக செயற்படுத்தி முடித்த மகிழ்ச்சியிலேயே இயேசுவிடம் சரணடைந்தவர் இவ்வுலக வாழ்வில் இயேசுவின் உயிர்ப்பையும் கண்டார். 1861.5.21ல் விண்ணிலே இவர் ஒரு புனிதராக இணைந்து கொண்டார். ஆகவே நாமும் கிறிஸ்துவின் அழைப்பிற்கு செவிமடுத்து அவர் வழி தொடர அ.ம.தி சபையில் எமது பாதங்களைப் பதிக்க முயற்சிப்போம்.



**"பணியாளர் ஒவ்வொருவருக் கும் ஆன்மீகத்தை வளர்க்க அதில் வளர வேண்டும்"**

இறைபணியில் இணைத் திட்ட ஒவ்வொரு இறைபணியாளரும் ஒவ்வொருநாளும் குறிப்பிட்ட சில மணி நேரத்தை தன்மையிலே இறைவனோடு செல வழிக்க வேண்டும். எவ்வளவு தான் அரும்பெரும் பணிகள் எமது கரங்களால் செய்து முடிக்கப்பட்டாலும் அதன் வெற்றி நாம் இறைவனோடு செலவழிக்கும் அந்த செபவேளையில் தான் தங்கியுள்ளது. மனித உடல் சதையால் ஆனது என்றும் அது அடிக்கடி சோர்ந்து போகும் என்றும் அறிந்த இயேசு "உள்ளம் ஊக்கமுடையதுதான் ஊனுடலோ வலுவற்றது என்கின்றார்" உள்ளத்து ஊக்கம் உடலில் பாய தூய ஆவியின் வரம் வேண்டும், தூய ஆவியின் வரம் தேவையென்றால் "அன்னையோடு அப்போஸ்தலர்களைப் போல்" செபத்தில் இணைந்திருக்க வேண்டும். அததோடு "ஒருவன் உலகெல்லாம் தனதாக்கிக் கொண்டாலும் தன் ஆன்மாவை இழப்பான் என்றால் அவனுக்கு வரும் பயன் என்ன?" எனும் இறை மொழியை எப்போதும் நினைவில் இருத்துதல் நல்லது.

"மரியே வாழ்க"

## ஆசியாவின் சுடர்விடும்..

(9ம் பக்கத் தொடர்ச்சி)

தாசர்கள் எல்லோரும் கூடிழந்த குருவிகளானது உண்மையே!

**இறைவனை இறங்கி வர வைக்கும் செபம் எனும் ஆன்மீகம்**

செபமாலைத்தாசர் சபையின் மாபெரும் பணி செபப்பணி. அல்லும் பகலும் உழைத்துத்தேயும பணியாளர்கள் அனைவருக்கும் "பக்தி" மையமாக (Power House) தொழிற்படுவதே காட்சித்தியான துறவற மடங்களின் பலனாகும். இருகரம் விரித்து இறைவனை நோக்கிச் செபிக்கும் நிகழ்வு பூமியை நோக்கி இறையருளை இறங்க வைக்கும் நிகழ்வாகும்.

## 31ம் நாள் நினைவஞ்சலி



*"இன்றே நீ என்னோடு வான் வீட்டில் இருப்பாய்"*

அன்பின் அகல்விளக்கே
பண்பின் உறைவிடமே
பாசத்தின் குலவிளக்கே
பக்தியின் பரம் பொருளே
கடமையில் கண்ணானவனே
உழைப்பினால் உயர்ந்தவனே
உடலால் எம்மை பிரிந்தாலும்
உள்ளத்திலும் உணர்விலும் என்றும்
எம்முடன் வாழகின்றீர்.

*உங்கள் ஆத்மா அமைதிக்காய் என்றும் இறைவனை வேண்டுகிறோம்.*

**சூசைப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை (யூட்)**
**(முல்லைத்தீவு)**

அன்னை மடியில் 1952*05*28 — ஆண்டவன் அழைப்பில் 2011*04*30

Advt-42/11

இவரின் 31ம் நாள் நினைவு திருப்பலி காலை 6.15 மணிக்கு முல்லைத்தீவு புனித யூதாததேயு ஆலயத்தில் ஒப்புக் கொடுக்கப்படும்.

தகவல் : குடும்பத்தினர்

## விண்ணக வாழ்வின் 1ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 18 - 05 - 1946



உதிர்வு 25 - 05 - 2010

"நாம் இவ்வுலகில் குடியிருக்கும் உடலாகிய கூடாரம் அழிந்து போனாலும் கடவுளிடம் இருந்து கிடைக்கும் வீடு ஒன்று விண்ணுலகில் எமக்குண்டு" (2 - கொரி 5:1)

**அமரர் திருமதி இராஜமலர் எட்வின் யோசவ் (மலர்)**

அன்பும் பண்பும் நிறைந்த பாசமுள்ள மம்மி, இல்லறத்தை நல்லறமாக்கி எம்மை அரவணைத்து, வழிகாட்டி, நேசமாய் வளர்த்த மம்மி, எம்மை விட்டுப் பிரிந்து சென்று ஓராண்டல்ல எத்தனை ஆண்டுகள் சென்றாலும் நீங்காத உம் நினைவு களோடு உம் ஆசைகளை நிறைவு செய்கின்ற வல்லமையுள்ள இறைவன் உமக்கு நித்திய பேரின்ப வாழ்வு தந்து ஆன்மா சாந்தியடையவும். உமது வழியாக எமக்கு அளித்த கொடை களுக்காகவும் நன்றி கூறிப் பிரார்த்திக்கின்றோம். நித்திய இளைப்பாற்றியை இவருக்கு அளித்தருளும் ஆண்டவரே. முடிவில்லாத பிரகாசம் பிரகாசிக்கக்கடவது. (இவரின் ஆன்ம சாந்திக்காக 25-05-2011ல் யாழ் ஆச்சிரமத்திலும், சுண்டிக்குளி புனித யுவானியார் ஆலயத்திலும். சில்லாலை கதிரை மாதா ஆலயத்திலும் காலைத் திருப்பலிகள் ஒப்புக் கொடுக்கப்படும்)

19 கறகம்பிட்டி குறொஸ் றோட்
தெகிவல (யாழ்ப்பாணம்)

Advt-40/11

உம் பிரிவால் துயருறும்
கணவர், பிள்ளைகள், உறவினர்கள்.


## அ.ம.தி. தந்த ஆத்ம வீரன்

மறைபரப்பு, இறை, சமூகப்பணிகள் பரந்த நிலையில் ஆற்றப்பட்ட போதும், அமதிகளின் ஆன்ம வளம் என்றும் வற்றாத ஆற்றுப்பெருக்காக அமைந்திருந்ததையும இச் சபையின் ஆன்மீக கணிப்பீட்டு அனுபவங்கள் காட்டி நிற்கின்றன.

அமதிகளின் அளப்பரிய பணிகளில் ஒன்று , ஆனமீக மா தியாகிகளை [அ.மா.தி.] களை உருவாக்கியது. இத் தியாகிகளில் ஓர் ஆன்மீக வீரத்தியாகியாக வெளிப்பட்டவர், தவத்திரு தோமஸ் அடிகளாவார்.

இவர் யாழ் நகரில், பாண்டியன் தாழ்வு என்ற இடத்தில் 07-03-1886இல் பிறந்தார். 06-01-1913இல் குருவானார். முதற்பணியாக, புனித பத்திரிசியார் கல்லூரியில் மறையாசிரியராகவும். இந்து மாணவர் விடுதிப பொறுப்பாளராகவும் பணி புரிந்தார்.

இக்காலகட்டத்தில், இக்கல்லூரி இந்து மாணவர் விடுதிகளில் இருந்த சிறந்த இரு மாணவர்கள், தார்சிசியூஸ் ஐயாததுரை, பாலசுந்தரம் என்பவர்கள் கத்தோலிக்க மறையை தழுவியதுடன் அமதி சபையில் இணைந்து குருக்களாக பாரிய பணியாற்றினார்கள்.

02-03-1928இல் தோலகட்டி என்ற சிற்றூரில் செப. தப வாழ்வை நோக்கமாகக் கொண்ட செபமாலை தாசர் சபையையும், 15-08-1950இல் செபமாலை கன்னியர் சபையையும் உருவாக்கி எமது நாட்டில் ஆன்மீகம் தழைக்க வித்திட்டார்.

இறைவனை முழு அன்புடனும் முழு உரிமையுடனும், அப்பா, தந்தாய் என அழைத்தார். இறைவனின் மகிமைக்காகவே என்றும் வாழ்ந்த இவர் "இறைவனுக்கு நிகர் யார்?" [சங். 70:19] என்ற விருது வாக்கை தன் வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டார்.

இறையன்பும், பிறரன்பும் இணைந்த தாழ்மை என்னும் அச்சிலே முழுமையாக வாழ்ந்தார். நற்கருணைப் பிரசன்னத்தில் தன்னையே மறந்து ஆன்மீக மகிழ்வில் தன்னையே இழந்தார். சகல சுமைகளையும இறைவன் பாதத்திலே கையளித்தார்.

தன்னுடைய துறவற சபையிலே, முதற் பணியாக நற்கருணை எழுந்தேற்றம் செய்து செபமாலை ஒதி, அனைத்து



மக்களையும் இணைத்து மனறாடினார், இவ் வாழ்விலே மக்களையும் தூண்டி வந்தார். மரியன்னை பக்தியை தன் வாழ்வின் ஊன்றுகோலாக அமைத்துக் கொண்டார்.

*மீள் பிரசுரச் சுருக்கம்.*
*செ.தா. உயர் தலைவர்*
*ஸ்ரீபன் அடிகளார்.*

## நன்றி என்ற சொல்லில், எழுகின்ற எண்ண அலைகள்....

எமது அன்பு நேயர்களில் தவழும் வண்ணமிகு "காவலன்" உருப்பெற உழைத்த உள்ளங்களிற்கு "நன்றி" என்ற மூன்றெழுத்துச் சொல் அலை போல் பலரைத் தழுவி மனம் என்ற கரையைத் தொடுகின்றது.

முதற்கண் "நன்றி" சென்றடைவது, எமது பாசமிகு ஆயரின் உள்ளமதில். கருத்துக்களை சுவைபடச் சொல்லி, ஆழ்மனதில் பதியக் கதை சொல்லி ஆசி வழங்கியது, அனைவருக்கும் மகிழ்ச்சி. எம்மோடு அவர் கொண்டுள்ள சொந்தம், அலைபோல் மீளத்தழுவி எம்மை நனைத்துக்கொண்டே இருக்கும்.

கண்களை அகலவிடாது கவ்விப் பிடிக்கும் "காவலன்" அமதி சிறப்பு மலர்க் கொத்தாக வெளிவந்ததன் அடிநாதம், வளன் அச்சகப் பொறுப்பாளர், குருமுதல்வர்; குறைந்த செலவில் கண்ணைக் கவர சுமைதாங்கியானார்.

மேலும் அன்னாரின் செய்தியில் எம்மை ஈர்க்கும் வரலாற்றுச் சிறப்புகள், நிறுவுனரின் தணியாத ஆன்மவாஞ்சையின் இரகசியம், முன்னோரின் அடிச்சுவட்டில் நாம் ஏறுமுகம் காண வேண்டிய உணர்வின் தேவைக்கு ஏற்ற தாளம் கேட்கின்றது என்றால் மிகையாகாது. இவ்வரிகளைச் செதுக்கிய போது - மூலம் ஆங்கிலம் - நிறுவுனரின் உள்ளக் கிடக்கையின் எண்ணங்கள், விபரிக்கையில் வெளிவந்த வார்த்தைகள் மடைதிறந்த வெள்ளம் போல் பீறிட்டு வந்தன, என அவர் கூறியது என்னை மெய்சிலிர்க்க வைத்தது. மூன்றெழுத்து தமிழ் பதம் உள்ளடக்கும் அனைத்தையும். என் தமிழாக்கம் ஈடு செய்யும் என்பது தவிப்பு.

எமது அமதிகளின் யாழ் மாகாண முதல்வரின் ஆசிச் செய்தியின் வரிகள் எம்மைப் புடமிடும் என்பதில் மகிழ்வுடன் நன்றி கூறி நிற்கின்றேன். இவரது கருத்தாழமிக்க நல்லுரைகள் எமக்குள்ளும், வெளியிலும், எமது குழும வாழ்விலும், ஏனைய குழுமங்களில் ஈடுபாட்டாலும் நலமே அமையட்டும்.

"காவலன்" தவழ, நாளாந்த நடைமுறைச் சிக்கலில் நாம் மாட்டிக்கொள்ளாது, வேண்டிய அனைத்தையும் அள்ளிச் சொரிந்த கைகள், காவலன் ஆசிரியப் பொறுப்பாளர், அருட்பணி சாள்ஸ் கொலின்ஸ் அவர்களதே; நான் மறந்து விடுவேனோ என்று ஐயத்தில், அடிக்கடி நேரில் சந்திக்கச் செய்து சீராக்கிய துணையாளர்.

ஆக்கங்களிற்கு குறைவில்லை- "ஆசிரியர் பார்வை" - தூண்டும் எண்ணக் கருக்களைத் தொகுத்தளித்தவர், முத்து என்ற அமதிச் சொத்து. ஞாபகங்கள் விரைவில் காற்றோடு காற்றாக பறந்து விடக்கூடாது, மாறாக நினைவலைகளை "நினைவுகளின் ஆன்மீகம்" என்ற சொல்லாடலில் எம்மை கிளர்த்தெழச் செய்கின்றார்.

வளனார் சிறிய குருமட விதைகள், டி மசெனட் உயர் குருமட வளரும் பயிர்கள் உவந்தளித்தவை, விதைகள் பண்பட்ட பூமியில் செழுமையாக வளருகின்ற சான்றுகள்.

அலெக்ஸ, பொதுநிலையினரின் கூர்ந்த பார்வையில், கடந்த கால நினைவுகளில் சந்திக்க வைத்து, சமகாலத் தேவைகளில் உண்மை காட்டி, வருங்கால எதிர்வுகளில் சவாலாக வடித்தெடுக்கின்றார்.

இயூஜின் கழகத்தின் பட்டாம் பூச்சிகள் தங்கள் வண்ணச் சிறகடித்து, ஆங்காங்கே வண்ணப் பொடிகளைத் தூவி சிறுவர் பக்கம் துலங்கச் செய்தார்.

பேராசிரியர், அருட்பணி ஞானமுத்து பிலேந்திரனின் மீள்பிரசுரம் பழையதே அல்ல - ஊக்குவிக்கும் "விற்றமின்".

விரிவுரையாளர், அருட்பணி. S.V.P. மங்களறாஜ் அடிகளார் மீண்டும் எங்களை வரலாற்று வகுப்பறைக்கு இட்டுச் சென்று, ஞாபகங்களில் மிதக்க விட்டு ஆழ்கடல் நோக்குகின்றார்.

அருட்பணி செல்வன் செ.தா அடிகளார் தன் விரிவான வரலாற்று நோக்கிலும், எதிர்கால பார்வையிலும் அமதியின் தாக்கத்தை எடுத்துரைத்து தாய் சேய் உறவிலே நாம் வளர ஆசித்தமைக்கு நன்றி.

அச்சகப் பணியாளர்கள் அனைவரின் நீட்டிய கரங்கள் மன்மதனின் அம்புகள் தானோ! சிறப்பாக, கணணித் தட்டச்சில் நடனம் புரிந்த செல்வி அமலாவின் நர்த்தன விரல்கள் - அத்துடன் இணைந்த புன்னகை பூத்த வரவேற்பு - தாமதமானாலும் ஆக்கங்களிற்கு இடம் உண்டு என்ற விரிந்த நோக்கு - அவருடன் தோள் கொடுத்த உதவியாளர்கள், இயந்திர விற்பனர்கள், பல்வகை நெறியாளர்கள்...

பாஷையூரில் அமைந்துள்ள "மிலேனியம்" நிறுவனத்தில், ஆத்திர அவசரமாக உதவி தேடிய போது, பொறியில் அச்சரம் பிசகாது வார்த்தெடுத்த அனற்றாவின் தளிர் விரல்கள்...

அசசகத்தில் பணியாற்றவில்லையென்றாலும், தன்னுடைய திறமையை உவந்தளித்த அருட்பணி. அருட்செல்வன் எமது

அருட்பணி ஞா. எட்மன் மைக்கல்...



மலரின் முதல், கடைசி பக்கங்களில் மனமுவந்து கலைவடிவம் தந்து, அருட்பணி சாள்ஸ் அவர்களின் சுமை குறைத்து முகக்கோலம் வண்ணமுறச் செய்தார்.

தன் வயிற்று வலியோடு, என் தலை வலியையும் "அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல," பொறுத்த அருட்சகோதரன் றமேஸ்....

நன்றி முடிவுற்றதா...அதற்குத் தான் எல்லையில்லையே....

புனித இயூஜினின் வாஞ்சையின் உந்துதலிலே,

அமலமரியின் தாய்மையின் அரவணைப்பிலே,

மூவொரு இறைவனின் அசையா இருப்பிலே,

நிறைவு கண்ட நன்றிக் களிப்பில், "காவலன்" ஏட்டிற்கு வளர்ச்சியும் வாழ்த்தும்.

அமலியின் குழுமத்திற்கு, எழுந்திடு, ஏறுமுகம் கண்டிடு எனும் முழக்கத்தில், குறைவிலும் கடமை செய்த ஆர்வத்தில் நன்றி என்ற முத்தமிழ் சொல்லில் இணைந்திடும்..

# புனித இயூஜினின் பொன் மொழிகள்

1. எரியாத திரிகளால் எனக்குப் பயனேது? எமது குழுவில் சுடர் விட்டு எரியும் திரிகளாய் இருங்கள். அல்லாவிடில் வெளியேறுங்கள்.

2. ஓர் பெரிய வெள்ளியன்று திருச்சிலுவையை உற்றுநோக்கிய என் கண்களில் வழிந்தோடிய கண்ணீர்:, இன்பத்தில் மூழ்கியிருந்த என் பாவ ஆன்மாவைத் தொட்டது. இதுவே என் வாழ்வின் திருப்புமுனை.

3. பூமியிலேயே அழகானதொரு பணிக்களத்தை நாம் ஏற்றுக்கொண்டிருக்கின்றோம். எத்துணை பரந்த பணிக்களம் அது.

4. நீங்கள் இறைவனின் பிள்ளைகள், இயேசுக் கிறிஸ்துவின் சகோதரர்கள் நீங்கள் பெறுமதி உடையவர்கள்: மதிப்பிற்குரியவர்கள்.

5. ஒரே உள்ளமும், ஒரே மனமும் கொண்டு நீங்கள் உருவர்கரும் குழுமத்தில் குழும்ப உணர்வை வளர்த்துக் கொள்ளுங்கள்.

6. நான் இலங்கையிலுள்ள ஒவ்வொரு அ.ம.திக-ளுடனும் நேரடியாகத் தொடர்பு கொள்ள ஆவலாகவுள்ளேன். என் எண்ணத்திலும், உள்ளத்திலும் ஒவ்வொரு விசேட இடம் பிடித்துள்ளார்கள்.

7. அப்போஸ்தலர்களின் அடிச்சுவடுகளைப் பின் தொடர ஆவலும், துணிவும் கொண்ட மனிதர்-களை என் சபைக்குத் தெரிவு செய்ய விரும்புகின்றேன்.

8. அன்னையாம் திருச்சபைதான் எமக்கு "அமலமரித்தியாகிகள்" எனும் பெயரைச் சூட்டியுள்ளாள். எனவே அன்புடனும், மதிப்புடனும் நன்றி உணர்வோடும் அதை ஏற்றுக்கொள்வதே எம் மகிழ்ச்சி.

9. பலதரப்பட்ட மக்கள் மத்தியில் ஆற்றும் எமது மீட்புப் பணிக்கு நாம் அணியும் திருச்சிலுவையே ஒரு சான்றிதழ்.

*G. Remoshan*

# வாழ்க்கைத் தடங்கள்....

1782 – அகஸ் சென் மாகாணத்தில் பிறப்பு

1791 – இத்தாலிக்கு நாடு கடத்தப்படல்

1802 – பிரான்சுக்கு திரும்பல்


1808 – குருமடத்தில் இணைதல்

1811 – குருத்துவ திருநிலைப்படுத்தல்

1816 – அமதிகள் சபை ஸ்தாபகம்

1832 – ஐக்கோசிய ஆயராக அபிஷேகம்

1841 – கனடா, அயர்லாந்து, இங்கிலாந்துக்கு முதல் அமதிகளை அனுப்புதல்



1861 – வைகாசி 21 இல் இறப்பு

1975 – அருளாளர் நிலை

1995 – புனிதர் பட்டம், ஜோன் போல் II வழங்கினார்.

## இன்று...!

அமதிகள் – 4000
67 நாடுகளில்!
ஆயிரக் கணக்கில் பொதுநிலை அமதிகள்!
அமதிகளின் அருங்கொடையோடு தொடர்புடைய 44 சபைகள்!
பலர் புனித இயூஜினை குடும்பங்களின் நெருக்கடிகளில் பரிந்துபேசுபவராக காண்கின்றனர்.



## ஓ இறைவா!

உமது ஆயராம் தூய இயூஜின் டி மசனட் அடிகளாரை தேசங்களிற்கு நற்செய்தியை அறிவிக்க அப்போஸ்தலிக்க ஆர்வத்தில் பற்றியெரியச் செய்தீரே! நாமும் அனைவரின் மீட்பிற்காகவும், திருச்சபையின் பணிக்காகவும் முழு இதயத்தோடு அர்ப்பணிக்க அதே ஆவியால் எம்மையும் நிரப்பியருளும் ஆமென்.

## செம்பியன்பற்று தூய பிலிப்புநேரியார் வருடாந்த திருவிழா – 2011

செம்பியன்பற்று தூய பிலிப்புநேரியார் ஆலயத் திருவிழா இம்மாதம் 26ம் திகதி (26-05-2011) வியாழக்கிழமை கொண்டாடப்படவுள்ளது. இத்திருவிழாவிற்கு இறைமக்கள் அனைவரையும் அன்போடு அழைத்து நிற்கிறேன்.

25-05-2011 மாலை 5.00 நற்கருணை விழா
26-05-2011 காலை 6.30 திருவிழாத் திருப்பலி
போக்குவரத்து : யாழ்ப்பாணம் பஸ்நிலையம் / பருத்தித்துறை
(அரச, தனியார் பஸ் சேவை)
25ம் திகதி மாலை 2.30 மணி
26ம் திகதி காலை 5.30 மணி

பங்குத்தந்தை



## வாழ்த்துகிறோம்



அமலமரித் தியாகிகளின் வடமாநில முதல்வராக இரண்டாவது தவணையிலும் தெரிவு செய்யப்பட்ட அருட்பணி ம. போல் நட்சத்திரம் அ.ம.தி அடிகளாருக்கு நெஞ்சார்ந்த வாழ்த்துக்களை கூறிநிற்கின்றோம்.

பாதுகாவலன் வாசகப் பெருமக்களே, எழுத்தாளர்களே, சந்தாதாரர்களே,
அபிமானிகளே, அன்பு நெஞ்சங்களே!
உங்கள் அனைவருக்கும் எம் அமதிகளின் நிறுவுனரின் 150 ஆவது ஆண்டு நிறைவின் உளம் பூரித்த வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.
– யாழ் மாகாண அமதிகள், புனித வளனார் கத்தோலிக்க அச்சக முகாமையாளர், பாதுகாவலன் ஆசிரியர், அச்சக ஊழியர்கள் –